வெளியீடு எண் : 388

உ
சிவமயம்

31222

## திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில்

# தல வரலாறு



அருள்மிகு அணைத்தெழுந்த நாயகர்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை

1990

உ

சிவமயம்

# தமிழ்ச் சிவஞானபோதம் அருளிய

# ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனர்

# குருபூசை விழா மலர்

பிரமோதூத — ஐப்பசி — சுவாதி

**16-11-1990**

வெளியீடு எண் : 388.

உ
சிவமயம்

திருவாவடுதுறை

# ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில்

# தலவரலாறு

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்துமூன்றாவது குரு மகாசந்நிதானம்

**சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்**

அருளாணையின் வண்ணம்

வெளியிடப்பெற்றது.


**திருவாவடுதுறை ஆதீனம்**


**1990**

உரிமை பதிவு :

விலை ரூபா :

முதற்பதிப்பு: 1986

இரண்டாம் பதிப்பு 1990



ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்

— திருவாவடுதுறை —



## குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
　　போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
　　மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
　　குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
　　நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

# பொருளடக்கம்


முன்னுரை

| | | | |
|---|---|---|---|
| 1. | தலவரலாறு | ... | 1 |
| 2. | தலப்பெருமைகள் | ... | 5 |
| 3. | தலத்தைப்பற்றிய நூல்கள் | ... | 6 |
| 4. | கோபுரமும் விமானமும் | ... | 7 |
| 5. | திருக்கோயிலில் மற்றைய மூர்த்திகள் | ... | 9 |
| 6. | முசுகுந்த சக்கரவர்த்தி மகப்பேறு பெற்ற வரலாறு | ... | 10 |
| 7. | திருமூலர் வரலாறு | .... | 15 |
| 8. | திருமாளிகைத்தேவர் வரலாறு | ... | 17 |
| 9. | கல்வெட்டுகள் | ... | 21 |
| 10. | திருவாவடுதுறைத் தேவாரத் திருப்பதிகங்கள் | ... | 31 |
| 11. | தலத் தொடர்புடைய பெரியபுராணப் பாடல்கள் | ... | 50 |
| 12. | அருணகிரிநாதர் திருப்புகழ் | ... | 53 |
| 13. | க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் | ... | 55 |
| 14. | வாழ்த்து (துறைசைப்புராணம்) | ... | 56 |

உ

*சிவமயம்*

# முன்னுரை

மூர்த்தி தலம் தீர்த்தம் இம் மூன்றினாலும் மிகவும் சிறப்புற்று விளங்குவது திருவாவடுதுறை என்னும் இத்திருத்தலம். இது காவிரித் தென்கரைத் தலங்களுள் 36-வது திருத்தலமாகும். திருக்கயிலாய பரம் பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் பரிபாலனத்தில் இருந்துவரும் இத்தலம் சமயாசாரியர் நால்வராலும் பாடல் பெற்ற சிறப்புடையது. திருவிசைப்பாவிலும் திருப்புகழிலும் இத்தலத்திற்குப் பாடல்கள் உள்ளன. திருமாளிகைத்தேவர் எழுந்தருளி அற்புதங்கள் நிகழ்த்திய பெருமையும் இத்தலத்திற்கு உண்டு. திருமூலதேவநாயனார் சிவயோகமிருந்து திருமந்திரம் அருளிச்செய்ததும், திருஞானசம்பந்தர் பொற்கிழி அருளப்பெற்றதும், முசுகுந்த சக்கரவர்த்தி புத்திரப்பேறு பெற்றதும் இத்தலத்தின் சிறப்பினைப் புலப்படுத்துவனவாகும். புத்திரப்பேறு இல்லாதவர்கள் இத்தலத்தில் எழுந் தருளியுள்ள தியாகராசப் பெருமானை அன்புடன் வழிபட்டால் புத்திரப் பேறு பெற்று இன்புறுவர். மாசிலாமணிப் பெருமானை மெய்யன்புடன் வழிபடுவோர் செல்வ வளம் பெற்றுச் சிறப்புறுவர்.

இத்தலத்திற்கு நவகோடி சித்தபுரம், நந்தி க்ஷேத்திரம், கோமுத்தி க்ஷேத்திரம் என்ற வேறு பல பெயர்களும் வழங்கப்படுகின்றன.

இத்திருக்கோயில் வசந்த மண்டபத்தை 3ஆம் குலோத்துங்க சோழன் அழகுற அமைத்துள்ளான். இவன் இத்தலத்தின் அருகில் உள்ள திருவாலங்காட்டுச் சிவாலயத்தையும், வடபத்ரகாளியம்மன் கோயிலையும் கட்டுவித்தான் என்பது வரலாறு. இவ்வூரில் திருமூலர் நாடகம் நிகழ்ந்தது பற்றியும், வைத்தியக்கல்லூரி ஒன்று இயங்கியது பற்றியும் கல்வெட்டு களின் மூலம் அறியப்படுகிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பும் புகழும் மிக்க இக்கோயிலின் அருகில் விளங்குகின்ற திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 600-ஆண்டுகளுக்கும் மேலாகச் செந்தமிழும் சைவமும் தழைத்து இனி தோங்க அரும் பணியாற்றி வருவது உலகறிந்த ஒரு உண்மையாகும்.

இப்பொழுது ஞானபீடத்தில் எழுந்தருளி சைவ பரிபாலனமும் செந்தமிழ்ப் பரிபாலனமும் செய்து வருகின்ற குரு மகாசந்நிதானம்

சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள் திருவாலங்காட்டுச் சிவாலயத்திற்கும் வடபத்ரகாளியம்மன் கோயிலுக்கும் சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்தருளினார்கள். மாசிலர்மணிப் பெருமான் கோயிலில் பள்ளியறை விமானம் பழுதடைந்தமையால் திருப்பணி செய்வித்து கும்பாபிஷேகம் நிகழச் செய்தார்கள். மேலும் பெரியபுராணம் அருளிய சேக்கிழார் பெருமானுக்குப் புதியதாகத் திருவுருவச்சிலையினை அறுபத்து மூவர் வரிசையில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தருளினார்கள். மேலும் சமய குரவர்கள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் முழுவதையும் திருக்கோயிலில் எண்ணெய் வண்ணத்தால் எழுதுவித்துள்ளார்கள்.

இத்தலம் சித்தபுருஷ சிரேஷ்டர்கள் வாழ்ந்த தலமாதலால் சித்தவனம் என்றும் வழங்கப் பெறுகிறது. இங்கே கல்விச்சாலை இருந்ததாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது. இக்கல்வெட்டு விக்ரம சோழன் 3-ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1112) ஏற்பட்டதாகும். சமய வாழ்வுச் சிறப்போடு சமுதாய நலம் பேணிய பழமையான வரலாறு கொண்ட இத்தலத்தில் சித்தமருத்துவமனை, பல்மருத்துவமனை, ஆங்கில முறை மருத்துவமனை அமைத்து இலவச மருத்துவ வசதிகள் செய்யப்பெற்றுள்ளன.

இவ்வாறு சமயப்பணியும் சமுதாயப் பணிகளும் செய்தருளும் சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் அடியேனையும் ஒரு பொருளாகக் கொண்டு திருவாவடுதுறை கோமுக்தீஸ்வரசுவாமி திருக்கோயில் வரலாறு என்னும் இந்நூலினை இரண்டாம் பதிப்பாக வெளியிடுமாறு கட்டளையிட்டருளிய வண்ணம் இந்நூல் வெளியிடப் பெறுகிறது. சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் திருவடிமலர்களை என்றும் போற்றி வணங்கிசிற்கும் கடப்பாடுடையேன்.

இப்பதிப்பில் இக்கோயிலின் கலைச் செல்வங்களை நிழற்படமாகச் செய்து இணைத்துள்ளதோடு இக்கோயிலின் வரைபடத்தையும் சேர்ந்துள்ளேன். மற்றும் முசுகுந்த சக்கரவர்த்தி வரலாறும் பிரதோஷ வழிபாட்டின் சிறப்பும் இதில் இணைத்துள்ளேன். சைவ நல்லுலகம் இந்நூலைப் பெற்றுப் பயன்பெற வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

ஆக்கியோன் - அடியேன்

S. நாராயணசுவாமி, எம். ஏ., பி. எட்.,

திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப்பள்ளி.

திருவிடைமருதூர்.

உ

SIVAMAYAM

# BRIEF HISTORY OF ARULMIGU GOMUKTHEESWARAR TEMPLE

## AT TIRUVAVADUTHURAI.

Tiruvavaduthurai ! Oh ! What a lovely devine place it is ! The sacred Cauvery flows on the northern side of the village while its distributary Veeracholan flows gently on the southern side boundary. Due to these two rivers the site is very fertile and the village is greenish through out the year. The well known Arulmigu Gomuktheeswarar temple is situated in the heart of the village. Four beautiful car streets run around the temple Of course, there are some crossroads and few lanes too. The living place of the village is surrounded by ever green paddy fields and flower gardens.

Tiruvavaduthurai is situated in between Mayiladuthurai and Kumbakonam in Thanjavur district of Tamil Nadu. The village can be reached either by train or by bus. It is about 2 - Kilometers from Narasinganpet railway station and about a Kilometer from its bus stop.

According to tradition, a place is considered to be sacred by its shrine or by its theertham or by the divinity of tht place *itself. Tiruvavaduthurai has all the three combined.* Due to these reasons the Thevara trio - Sambandar, Appar and Sundarar - have visited this place and sung number of hymns in praise of the shrine. The elegance and melody in the verses of Thevaram is also a cause to attract more and more devotees to this holy place. Sendanar - One of the

authors of Tiruvisaippa had also sung songs in praise of this deity. In short Tiruvavaduthurai is nothing less than Sri Kailash on Earth.

The holy water tank - Mukthi theertham is just in front of the main manumental eastern gate way with five storied tower - RajaGoparam. In all, the temple has three manumenta towers and twenty vimanams.

When one enters the temple, the huge gigantic bull - Nandi, built with cut stones, catches the eyes and heart. No where in India or abroad one can see such a huge Nandi. The stala viruksha - sacred tree - Pipil tree is just by the side of the Nandi. On the northern side, big and beautifully constructed Vasanta Mahal is located. The temple has three praharams.

The main shrine is of Arulmigu Gomuktheeswarar alias Masilamaneeswarar. The goddess is Arulmigu Oppilamulaiammai Further Lord Ganesh, Lord Subramania with Valli and Deivayanai, Vishvanathar Visalakshi, 72 - Saiva saints, Sekeizhar, Anaithezhunda Nayakar Lord Nataraja with Sivakami, Thiyagaraja, Durga, Sandeswar and many more deities adorn the temple. The deities of four Saiva Siddhanta prophets - Meikandar, Arulnandhi, Maraignana sambandar and Umapathy sivachariyar are also installed.

Daily Poojas are performed for all deities six times a day. Viz.

| | | |
|---|---|---|
| Usha Kalam | at | 6-00 AM |
| Kala Sandhi | at | 10-30 AM |
| Utchi Kalam | at | 12-00 noon |
| Sayangalam | at | 5-00 PM |
| Erandam Kalam | at | 7-30 PM |
| Artha Jamam | at | 9-00 PM |

In the month of Jan – Feb the annual festival is celebrated for ten days. The festival ends with Ratha Saptami theerthavari.

Further Tamil new year's day, Ani Tirumanjanam Adi Velli, Avani Vinayaka Chathurthy, Purattasi Navarathri. Aippasi Kanda Sashti, Markazhi Tiruvathirai, Kartik Somavaram, Thai Velli, Masi Sivarathri, Panguni Uthiram are also celebrated Thousands of devotees from in and around Tiruvavaduthurai visit the temple and Worship on these days. They pray in all sincerity and the true devotees get what they wish.

Some of the important Purana / historical events which took place at Tiruvavaduthurai are listed below :

1. Once, because of a curse Goddess Parvathy had to take the form of a cow. After performing pooja rituals to this shrine for years, the cow got the curse removed and she took the original form of Goddess and joined Lord Siva The Structure is sculptured as Anaithezhunda Nayakar

2. On the request of Devas and saints Lord Siva danced under the pipil tree.

3. One Chola king named Musukundan was not bleessed with a Child for years. On praying this deity he got number of children with fame.

4. Tirumular, the author of Tirumantram - one of the twelve holiest Saiva religious books, lived here for 3000 years to complete his book. His shrine is located on the western side of second praharam.

5. Thirugnana Sambandar, One of the authors of Thevaram, was gifted with thousand gold Coins to Conduct a Siva Velvi by his father.

6. There were eighteen famous Siddars, those who can do wonders on earth, lived on various times in Tamil Nadu. Bogar, one of those eighteen lived here. It is also said thousands of Siddars lived here and therefore this place came to be known as "*Navakoti Siddapuram.*"

7. Tirumaligai Devar, one of the author of Tiruvisaippa lived here. His Shrine is at Tiruvavaduthurai Adheenam Mutt.

8. Due to the grace of Arulmigu Gomuktheeswarar, Siddar Sivaprakasar asked his disciple Namasivaya Murthy to stay at this place and teach Siva Gnanam to the deserved people. Like this in 14th Century the great Tiruvavaduthurai Adheenam was established by Arulthiru Namasivaya murthigal. From that time on wards for the last five centuries this mutt has continuously endeavoured on various spheres to improve not only Saivism but also Tamil literature in Tamil Nadu To name a few Mahavidwan Tirusirapuram Meenakshi sundaram pillai, Dr. U. V. Swaminatha Ayyar were the products of this mutt.

In succession 23rd peedathipathy Seer Valar Seer Sivaprakasa Pandara Sannithy is ruling Tiruvavaduthurai Adheenam He is very keen on the proper maintenance of temples as per Agamas He has plans to improve this temple and also to provide adequate facilities for the devotees who visit the temple. The main mutt is located just on the southern side of the temple.

During the period of 22nd peedathipathy of this mutt, Arulthiru Ambalavana Desikar, Maha kumbabishekam of this temple was carried out on 27—8—1972.

The following are a few Literatures, praising this place and shrine.

| | Tittle | Author |
|---|---|---|
| 1. | Thevaram | Sambandar |
| 2. | Thevaram | Appar |
| 3. | Thevaram | Sundarar |
| 4. | Thiruvasakam | Manickavasakar |
| 5. | Thiruvisaippa | Sendanar |
| 6. | Thirumantram | Tirumular |
| 7. | Periapuranam | Sekeizhar |
| 8. | Turaisai Puranam | Sastram Swaminatha munivar |
| 9. | Turaisai Yamaha Antathy | Mahavidwan Meenakshi sundaram Pillai |
| 10. | Turaisai Siledai Venba | Ponnusamy Chettiar |
| 11. | Truaisai Venba Anthathy | |
| 12. | Oppilamulai Ammai Pillai Tamizh | |

When this temple came into existance ? Even today the question is unanswered. Anyway as per an Inscription the temple was renovated with plack stone structure by First Parandaka Cholan. His period was 907 A. D. to 948 A. D, There are many inscriptions in this temple In 1953 those inscriptions were translated / written by an expert Sundaresa Vandaiyar. They are kept at Saraswathy Mahal library of Tiruvavaduthurai Mutt.

Since this temple is under the direct control of Tiruvavadu thurai Adheenam, It is maintained well. All the festivals and annual functions are carried out with great enthusiasm and religious fervour.

Let us visit this place and pray Lord Gomukteeswarar to bless us and the world with peace and prosperity.


# வாழ்த்து

## மாசிலாமணியீசர்

ஆசிலாத் தென்துறைசை அரசடியின்
முளைத்தெழுந்த அமுதை ஞானத்
தேசுலா வுங்கருணைச் சிவக்கொழுந்தைப்
பரபோகத் திரளை யார்க்கும்
பேசொணாச் சுகந்தருமுக் கட்கனியை
யன்பரின்பப் பெருக்கில் தோன்றும்
மாசிலா மணியினைக்கண் மணிகுளிரக்
கண்டுதினம் வணங்கி வாழ்வாம்

## ஒப்பிலாமுலையம்மை


கற்புமிகுங் கருணையினால் கவுணியர்க்குப்
பால்சுரந்து கயிலை வெற்பைச்
சுப்பிரமாக் கிப்பெருமே ருவை வளைத்துத்
தலைவர்பொருஞ் சூதை வென்று
செப்புநான் மறைக்கடங்காப் பெருவெளியை
வடுப்படுத்தித் திகழ்ந்து வாழும்
ஒப்பிலா முலையுபயத் தாட்குஅபயங்
கூறிமகிழ்ந்து உளத்துள் வைப்பாம்.



அருள்மிகு மாசிலாமணிப்பெருமான்


-: திருவாவடுதுறை - ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் தரை வரைப் படம் :-

THIRUVAVADUTHURAI - Sri COMUTHEESWARAR SIVATEMPLE GROUND PLAN.



# திருவாவடுதுறை
# அருள்மிகு கோமுக்தீஸ்வரர் திருக்கோயில்
# தரைப்படத்தின் விபரம்


1. ஸ்ரீகோமுக்தீஸ்வரர் மூலஸ்தானம்
2. அர்த்தமண்டபம்
3. மகா மண்டபம்
4. (உற்சவர்) தியாகராஜர் சந்நிதி
5. மகாமண்டபம்
6. அறுபத்துமூவர்
7. சேக்கிழார்
8. கன்னி விநாயகர்
9. ஞானம்பிகை
10. காளத்தீஸ்வரர்
11. பாண்டியலிங்கம்
12. கொங்கணேஸ்வரர்
13. கொங்கணேஸ்வரி
14. சுப்ரமணியர்
15. சரஸ்வதி
16. மீனாட்சி
17. சொக்கலிங்கம்
18. விசுவநாதர்
19. சேரலிங்கம
20. மகாலெட்சுமி
21. ஸ்ரீ அணைத்தெழுந்த நாயகர் உற்சவர்
22. ஸ்ரீ சண்டிகேஸ்வரர்
23. ஸ்ரீ நடராஜர்
24. கோருபாம்பிகை
25. சோழலிங்கம்
26. சனீஸ்வரர்
27. பைரவர்
28. பஞ்சலிங்கம்
29. சந்திரன்
30. சூரியன்
31. சுந்தரர் (உற்சவர்)
32. ஸ்ரீ ஒப்பிலாமுலையம்மை மூலஸ்தானம்
33. அர்த்தமண்டபம் அம்மன்கோயில்
34. மகாமண்டபம்
35. மடைப்பள்ளி
36. உக்கிராணம் & களஞ்சியம்
37. யானைக் கொட்டகை
38. வரசித்தி விநாயகர்
39. நால்வர் & திருமுறை கோயில்
40. நந்தி
41. தலவிருட்சம் – படரரசு
42. வசந்தமண்டபம்
43. அம்மன்கோயில் - யாகசாலை
44. யாகசாலை
45. ஆதிகோமுக்தீஸ்வரர் திருக்கோயில்
46. நால்வர் திருக்கோயில்
47. கிழக்கு இராஜகோபுரம்
48. திருக்குளம
49. இரண்டாம்கோபுரம்
50. மூனறும்கோபுரம்
51. வடக்கு வாசல்
52. தெற்கு வாசல்
53. திருமூலர் திருக்கோயில்
54. அலுவலகம்
55. துணைவந்தவிநாயகர்
56. சுப்பிரமணியர்



அருள்மிகு தலவிநாயகர்



அள்ருமிகு தெட்சணாமூர்த்தி




அருள்மிகு கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் — உள்தோற்றம்



அருள்மிகு கோருபாம்பிகை




திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் மாணிக்கவாசகர்



திருமூலர், திருமாளிகைத்தேவர். நந்திகேசுவரர்.


அருள்மிகு கன்னிவிநாயகர்



சுந்தரர்



அருள்மிகு அணைத்தெழுந்தநாயகர்




அருள்மிகு ஆடல்வல்லான்




அருள்மிகு புத்திரத்தியாகராசப் பெருமான்




அருள்மிகு மாசிலாமணிப் பெருமான் அருளால் பெற்ற
பொன்னுலவாக் கிழியினை ஞானசம்பந்தரிடம் சிவபாத இருதயர் பெறுதல்



அருள்மிகு மாசிலாமணிப் பெருமான் திருக்கோயில்
திருமூலர் திருவிழாக் காட்சி



திருமூலர் திருக்கோயில்



அருள்மிகு ஆடிபூர அம்மன்



அருள்மிகு துர்க்கை

உ
சிவமயம்

# திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில

# தலவரலாறு

**தலமும் இருப்பிடமும் :**

தமிழ் நாட்டில் உள்ள சிவாலயங்களுள் தேவாரப் பதிகங்கள் பெற்ற தலங்களே சிறப்புடையனவாகப் போற்றப்படுகின்றன. அவற்றுள் மூர்த்தி தலம் தீர்த்தம். எனும் மூன்றினும் சிறந்து விளங்கும் திருவாவடுதுறை மிகுந்த சிறப்புடைய தலமாகும்.

இத்தலம் மயிலாடுதுறை கும்பகோணம் இருப்புப்பாதையில் உள்ள நரசிங்கன் பேட்டைப் புகைவண்டி நிலயத்துக்குக் கிழக்கே 3 கி. மீட்டர் தொலைவிலும் மயிலாடுதுறை கும்பகோணம் கற்சாலையில் திருவாவடுதுறை எனும் பேருந்து நிலயத்திலிருந்து தெற்காக 1 கி. மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இது காவிரியின் தென்பால் 36 ஆவது தலமாகப் போற்றப்பட்டு வருகிறது.

**பெயர்க் காரணம் :**

திருக்கயிலாயத்தில் இறைவி இறைவனோடு சொக்கட்டான் ஆடிக் களித்தமையால் பசு வடிவம் பெறும் சாபம் எய்தினர். பசு வடிவத்தோடு இறைவியானவள் இத்தலப் பெருமானை வழிபட்டு அவ்வடிவம் நீங்கப் பெற்றனர். இதனால் கோமுக்திநகர் என்னும் பெயர் இத்தலத்திற் கமைந்தது.

**தலத்தின் வேறு பெயர்கள் :**

கோகழி, துறைசை, திருவாவடுதுறை, பூலோகக் கயிலாயம், நந்திக்ஷேத்திரம், தியாகபுரம், போதிவனம். அரசவனம், மகாதாண்டவபுரம், வேதபுரம், சித்தபுரம் நவகோடி சித்தபுரம், கோமுக்தித்தலம், முக்தி க்ஷேத்ரம். சிவபுரம் என்பன இத்தலத்திற்கு வழங்கப்படும் பெயர்களாகும்

**இறைவன் திருநாமங்கள் :**

கோமுக்தீசுவரர், மாசிலாமணீசர், கோகழிநாதர், அணைத்தெழுந்த நாயகர், பூகயிலேசுவரர், புத்திரத்தியாகர், போதிவனநாதர், போதியம் பலவாணர், மகாதாண்டவேசுரர், அர்த்தத்தியாகர், முத்தித்தியாகர், சிவலோகநாயகர், திருவாவடுதுறை உடையார் என்றும் திருவாவடு துறைப் பரமசாமி, திருவாவடுதுறை ஆழ்வார் எனும் இப் பெயர்கள் கல்வெட்டுகளிலும் வழங்கப்படுகின்றன.

**இறைவியின் திருநாமங்கள் :**

அதுலகுசநாயகி, ஒப்பிலாமுலையம்மை, ஒப்பிலாள் என்பன.

**தீர்த்தங்கள் :**

திருக்கோயிலின் முன்னால் காணப்படும் திருக்குளம் முக்தி தீர்த்தம் எனப் போற்றப்படும் கோமுக்தி தீர்த்தமாகும். கைவல்ய தீர்த்தம் – இது காவிரித்துறையில் உள்ளது. பத்ம தீர்த்தம் – இது கொங்கணேசுவரர் கோயிலின் வடபாகத்தில் உள்ளது.

**தலவிருட்சம் :**

இத்தலத்தின் தலவிருட்சம் அரசமரமாகும். படரரசு எனவும், நிலவரசு எனவும் வழங்கப்படுகிறது; மெய்யன்பர்கள் இதனை அன்போடு வலம் வந்து இஷ்ட சித்திகளைப் பெறுகின்றனர்.

**சபை :**

போதியம்பலம் என்றும், அரசம்பலம் என்றும் வழங்கப்படுகிறது.

**நந்தி :**

இத்தலத்தை நந்தித்தலம் எனப் பகர்வர். இவ்வாலயத்தின் மதில்களில் உள்ள நந்திகள் திருமாளிகைத் தேவருக்காகத் திரண்டு ஓர் உருவமாக அமைந்தன. இது தர்மத்தின் திருவுருவமாகும். விஸ்வரூப நந்தியாகவும் போற்றப்பட்டு வருகிறது.

மற்றைய ஆலயங்களில் ஒரே கல்லினால் வடிக்கப்பட்டு இத்திருவுருவம் அமைந்திருக்கும், ஆனால் இந்தப் பல சதுர நீண்ட செவ்வகக் கற்களால் வியத்தகுமுறையில் அமைக்கப் பட்டுள்ளது. இதற்குப் பிரதோஷ காலங் களிலும், பிர்மோற்சவ காலங்களிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழும்.

**பிரதோஷச் சிறப்பு :**

மூலஇலிங்கத் தலமாகிய திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவாரக் கடவுளர் சிறப்புடைத் தலங்களாக திருவலஞ்சுழி, சுவாமிமலை, சிதம்பரம், திருவாரூர், முதலியனபோல நந்திகேசுரர் தலமாகத் திகழ்வது இத்திருவாவடுதுறை

சிவாலயங்களில் பிரதோஷகால வழிபாடு சிறப்புடையதாயினும், இத் தலத்தின் மாசிலாமணிப் பெருமானையும் நந்தியெம்பெருமானையும் அந்நாளில் வழிபடுவது மிகுந்த சிறப்புடையதாகும்

**பிரதோஷ வரலாறு :**

" பிரதோஷம் என்பது பாற்கடல் கடையப் பெற்ற நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டுள்ளது. முன் ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நீண்ட போர் ஏற்பட்டது. மரணத்தைத் தவிர்க்கும் அமிர்தத்தைப் பெற விரும்பினர். அதனால் மந்திர மலையை மத்தாகவும் வாசுகி எனும் பாம்பைக் கயிறாகவும் கட்டி வால் புறம் தேவர்களும், தலைப்புறம் அசுரர்களும் நின்று பாற்கடலைக் கடைந்தனர், வாசுகிக்குத் துன்பம் தாங்காது விஷத்தைக் கக்கவும், அதே சமயத்தில் பாற்கடலில் நஞ்சும் வெளி வந்தது

இரண்டு விஷங்களும் உலகத்திற்கே கேடுவிளைவிப்பனவாக எழுந்தன' தேவர்கள் கயிலை நாதனிடம் இதனை முறையிட்டு 'எங்களைக் காப்பாற்றியருள வேண்டும்' என முறையிட்டனர்.

சிவபெருமான் தேவர்களின் துயரம் களைய திருவுளம் கொண்டு தம்மிடம் பணி செய்து வருகின்ற சுந்தரரை நோக்கிப் பாற்கடலில் எழுந்த விஷத்தைக் கொண்டு வருக எனக் கட்டளையிட்டார்.

சுந்தரரும் அவ்வாறே நஞ்சினைத் தமது கரத்திலே ஏந்திக் கொண்டு வந்துகொடுக்க. பெருமானுர் அதனையே அமிர்தம் போல் உட்கொண்டார். நஞ்சைத் தம் கண்டத்திலே நிறுத்தியதனுல் நஞ்சுண்ட நீலகண்டர் எனப் போற்றப்பட்டார்.

**பிரதோஷ வழிபாட்டு முறை :**

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை தேய்பிறை இவ்விரண்டு காலங்களிலும் வரும் திரயோதசி திதியில் சூரியன் மறைவதற்கு முன் உள்ள 3½

நாழிகையும் சூரியன் மறைந்தபின் உள்ள 3¾ நாழிகையும் சேர்ந்த காலம் ( பிற்பகல் 4½ மணி முதல் 7 மணி வரையில் உள்ள காலம் ) பிரதோஷ காலமாகும்.

எனினும், சூரியன் மறைவதற்கு முன் உள்ள 3¾ நாழிகையிலுள்ள நேரமே சிவ தரிசனத்திற்கு ஏற்றதென் ஆன்றோர்கள் வகுத்துள்ளார்கள். சனிக்கிழமையில் வரும் பிரதோஷம் சிறப்புடையது. சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்டது சனிகிழமையில் தான். பின்னர் கயிலையில் தேவர்களுக்கு அருள்பாலிக்க சந்தியா தாண்டவம் புரிந்தருளினர்.

திரயோதசி ஒரே நாளில் முழு அளவில் எப்போதும் வருவதில்லை. சில சமயங்களில் இரண்டு நாட்களிலும் திரயோதசி வருவதுண்டு. இத்தகைய சூழ்நிலையில் எந்த நாளில் பிரதோஷ வழிபாடு செய்ய வேண்டும் எனத் தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும்.

**தரிசிக்கும்முறை :**

பரம கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் தேவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கிக் கயிலையில் மாலை (4–30 மணி முதல் 6–45மணி வரை) பிரதோஷ வேளையில் தம்முடைய வாகனமான ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் நின்று அம்பிகையும், தேவர்களும் காண திருநடனம் ஆடினார். இந்தத் தாண்டவத்திற்கு சந்தியா தாண்டவம் எனப்பெயர்.

ஆகவேதான் பிரதோஷ காலங்களில் நாம் ஆலயம் சென்று சிவபெருமானை வழிபடும் சமயம் நந்தியின்இரு கொம்பு களுக்கிடையே பெருமானைத் தரிசிக்க வேண்டும் என்பது முறையாகவுள்ளது.

சிவ விரதங்களில் மிகச்சிறப்புடையது பிரதோஷ விரதமாகும். இதனை முறைப்படி மேற்கொள்வோர் துன்பங்களிலிருந்து நீக்கம் பெறுவர் என்பது உறுதி.

பிரதோஷ நன்னாளில் பிரதோஷ வழிபாடு முடித்துக் கொண்ட பின்னர் உணவு அருந்தும் வழக்கம் மேற்கொண்டால் போதுமானதாகும். இயன்ற அளவு தங்களின், வீட்டின் அருகிலிருக்கும் சிவன்கோயிலுக்குச் சென்று பஞ்சாட்சர ஜபம் செய்வதும், பஞ்சாட்சரப் பதிகத்தைப் பாராயணம் செய்வதும் முறையாகும்.

**சோமசூக்தப் பிரதக்ஷிணம்**

முதலில் இடப தேவரைத் தரிசிக்க வேண்டும். அங்கிருந்து சண்டேசுரரைத் தரிசித்துச் சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசிக்கும் பிரதக்ஷிணம் சோம சூக்தப் பிரதக்ஷிணம் எனப்படும். இல்லையேல் அந்தந்த தலத்தில் வழிபடும் முறையை அநுசரிக்க வேண்டும். அருணகிரிப்புராணம் வலம்புரிச் சருக்கத்தில் கீழ்க்கண்டவாறு இச்சோம சூத்திர பிரதக்ஷிணமுறை விளக்கப்படுகின்றது.

"தெரிசித்துதிட விடையைச் சென்றிடஞ் சண்டேசன்
திருவடியைத் தெரிசித்து மீண்டு திடவிடையைத்
தெரிசித்துச் சென்று வலஞ்சோம திசை சேர்ந்து
மீண்டிடபந் தெரிசித்துத் திகழ் சண்டனடியைத்
தெரிசித்துப் பராசத்தி யெனும் சோமஞ் சேர்ந்து
மீண்டு திறற் சண்டனடி தரிசித்து விடையைத்
தெரிசித்துச் சிவலிங்கந் தெரிசித்துப் பணிக
விதுசோம சூத்திரமொன் னனந்த பலஞ்செயுமே" ......

**தீர்த்த விசேஷம் :**

அமாவாசை, பிரதோஷம், அட்டமி, உத்தராயணம், தட்சிணாயனம், சோமவாரம், கார்த்திகைச் சோமவாரங்கள், செவ்வாய்க்கிழமை, பிர்மோற்ஸவ காலங்கள், தீர்த்தவாரி, முதலிய தினங்களில் நீராடி இஷ்டசித்திகளைப் பெறலாம் எனத் தலபுராணம் கூறுகின்றது.

**வழிபட்டுப் பேறுபெற்றோர் :**

உமாதேவியார், தருமநந்தி, முசுகுந்த சக்கரவர்த்தி, செவ்வாய் அகத்தியர், அக்னி, நவகோடி சித்தர்கள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், போகர்; திருமாளிகைத்தேவர், சேரமான் பெருமாள் நாயனார், வரகுணபாண்டியன் கோச்செங்கட்சோழன், மிதிலேசன், முனிவர் பலர் இத்தலத்தை வழிபட்டுச் சிவபிரான் அருள்பெற்றனர்.

## தலப்பெருமைகள்

1. பசுவடிவாக இருந்த உமாதேவியார் இவ்விறைவனை வழிபட்டுப் பசுரூபம் நீங்க, இறைவன் உமையை அணைத்தெழுந்து நின்று காட்சி கொடுத்தருளினார்.

2. தேவர்களும், முனிவர்களும் வேண்டியதற்கிணங்க இறைவன் இவ்விரச மரத்தின் நிழலில் அமர்ந்து அம்பலத்தில் தாண்டவம் புரிந்தருளினார்.

3. புத்திர பாக்கியமளித்து முசுகுந்த சக்கரவர்த்திக்குத் தியாகேசராகக் காட்சி கொடுத்தும், சுந்தரநடனம் நிகழ்த்தியும் அருள்செய்தார்.

4. தருமதேவதையை இடபமாகக் கொண்டதன்றித் தம் சந்நிதியில் இருக்கும்படி பணித்தார்.

5. திருமூலர் ஆகம சாரமான திருமந்திர நூலை அருளினார்.

6. திருஞானசம்பந்தருக்குப் பூதகணத்தின் மூலம் இத்தலத்துப் பெருமான் பொன் உலவாக் கிழியினை வழங்கியருளினார்.

7. முனிவர்களுக்கும், அந்தணர்களுக்கும சிவஞான உபதேசம் செய்தது.

8. போகர் முதலிய நவகோடி சித்தர்களுக்கு அட்டமா சித்திகளை அருளியது.

9. திருமாளிகைத் தேவருக்கு அம்பிகையின் வேண்டுகோளுக்கிணங்கிச் சிவபெருமான் அருள்புரிந்தது.

10. சமயாச்சாரியர்கள் நால்வரால் பாடல்பெற்றமை.

11. இப் பெருமானின் அருளால் சித்தர் சிவப்பிரகாசர் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளை இவ்வாதீனப் பிரதம பரமாசாரியாராக விளங்கவைத்துத் தொடர்ந்து செந்தமிழ்ப் பரிபாலனமும், சித்தாந்த சைவ பரிபாலனமும், செய்துவரச் செய்தார். காலம் 14-ஆம் நூற்றாண்டு.

## தலத்தைப்பற்றிய நூல்கள்

திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் – 1. திருநாவுக்கரசர் அருளிய பதிகம் – 5, சுந்தரர் அருளிய பதிகம் – 2, சேந்தனார் அருளிய திருவிசைப்பா பதிகம் – 1.

மற்றும் திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம் முதலிய நூல்களில் இத்தலம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத் திருவாவடுதுறை ஆதீனம் 10-வது பட்டம் ஸ்ரீ வேலப்ப தேசிக மூர்த்திகள் ( கி. பி. 1678 – கி. பி. 1700 ) அருளாட்சிக் காலத்தவராகிய ஸ்ரீ சாஸ்திரம் சாமிநாத முனிவர் அருளிய துறைசைப் புராணம்.* இத்தலத்தின் பெருமைகளை விரிவாக விளக்குவதாகும்.

* *துறைசைப் புராண - வசன வடிவில் இவ்வாதீன பதிப்பாக வந்துள்ளது. மூலம் விரைவில் அச்சிடப்படவுள்ளது.*

இவ்வாதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியருளிய துறைசை யமகவந்தாதியும் இவ்வாதீனத்து இராயசம் ஸ்ரீ பொன்னுசாமிச் செட்டியார் இயற்றிய துறைசைச் சிலேடைவெண்பாவும், துறைசை வெண்பா அந்தாதியும், ஒப்பிலா முலையம்மை பிள்ளைத்தமிழும் இத்தலத்தைப் பற்றிய சிற்றிலக்கியங்களாம். இப்பிள்ளைத்தமிழ் ஆதீன சரஸ்வதிமஹால் நூல்நிலைய ஆய்வுமையத்தில் உள்ளது. இந்நூல் ஆசிரியர்பற்றி ஏதும் தெரியவில்லை.

ஸ்காந்த புராணத்திலே ருத்ர ஸம்ஹிதை என்றபகுதியில் இவ்வூர்ப் புராணம் கூறப்படுகிறது.

ஆக்நேய புராணத்தில் இந்தத் தலத்தின் விசேஷம் கூறப்பட்டுள்ளது.

அகத்திய பக்தவிலாசம், உபமன்யு பக்தவிலாசம், என்ற நூல்களில் நாயன்மார்கள் இத்தலத்திற்கு வந்து வழிபாடாற்றிய செய்திகளைக் கூறும் போது தலச்சிறப்பும் கூறப்படுகிறது

**பூஜைகளும், திருவிழாக்களும் :**

இத்திருக்கோயிலில் ஆறுகால பூஜை நிகழ்ந்து வருகிறது. நித்திய, நைமித்திக பூஜைகளும் தை மாதத்தில் மகோற்சவமும் நடைபெறுகின்றன.

வருடப்பிறப்பு, விநாயகசதுர்த்தி, மார்கழி மாதம் திருவாதிரை, கார்த்திகைச் சோமவாரம், சங்காபிஷேகம், ஆனித்திருமஞ்சனம், அன்னாபிஷேகம், பிரதோஷ வழிபாடு, நவராத்திரி ஆடிவெள்ளி, தை வெள்ளி, மகா சிவராத்திரி, திருமாளிகைத்தேவர் ஏகதின உற்ஸவம், கந்தசஷ்டி – சூரசம்ஹாரம், பங்குனி உத்திரம் முதலான நாட்களில் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பட்டுத் திருவீதி உலாவும் நடைபெற்று வருகின்றன.

## கோபுரமும், விமானமும்,

இத்திருக்கோயிலில் மூன்று இராஜகோபுரங்களும், 20 விமானங்களும், பெரிய அளவில் வஸந்த மண்டபமும் அமைந்துள்ளன.

முதல் இராசகோபுரம் 5 துவாரங்களையும் 7 கலசங்களையும் கொண்டதாகும். இதில் திருஞானசம்பந்தர் உலவாக்கிழி பெறுதல், திருமூலர் தவம் செய்தல், பாற்கடலைக்கடைதல், தியாகேசரை முசுகுந்தன் வழிபடல், தாருகாவன நிகழ்ச்சிகள் முதலான புராண வரலாற்றுச் சிற்பங்கள் சுதையால் அமைக்கப்பட்டுள்ளன.

2-வது 3-வது இராசகோபுரங்கள் முறையே 5 துவாரங்களையும், 2 துவாரங்களையும் கொண்டு 5 கலசங்களைத் தாங்கியுள்ளன.

**சுவாமி விமானம்**

துவை தளவிமானமாகும். கயிலாயக்காட்சி சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது. ஏக கலசம் வைக்கப்பட்டுள்ளது.

**அம்பாள் விமானம் :**

மூன்று கலசங்கள் கொண்ட துவைத விமானமாக அமைந்துள்ள தனிக்கோயிலாகும். தெற்குநோக்கிய சந்நிதி ஆகும். ஆடிப்பூர அம்மனுக்கும், பள்ளியறைக்கும் ஏகதள விமானமாக அமைக்கப்பட்டுள்ளது.

அணைத்தெழுந்த நாயகருடைய கோயிலின் விமானமும், கூத்தப் பெருமான் கோயிலின் விமானமும் மூன்று கலசங்கள் கொண்டனவாகத் தில்லைக் கோயில் அமைப்பில் விமானம் காணப்படுகிறது, சுதையால் கலசங்கள் செய்யப்பட்டுள்ளன.

மேற்கு ஆவரணத்தில் உள்ள விநாயகர், ஞானம்பிகை, காளத்தீஸ்வரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுக்கு ஏகதள விமானங்களாகச் செப்புக் கலசங்களுடன் காணப்படுகின்றன.

தியாகராஜர் விமானம் ஏகதள விமானமாகும். கிழக்கிலிருந்து பிரதட்சிணமாகத் தியாகராஜர், விநாயகர், தட்சிணாமூர்த்தி, ஞானசம்பந்தர், விஷ்ணு, சுந்தரர், பிர்மா, முசுகுந்த மன்னன் சிற்பங்கள் விமானத்தில் உள்ளன.

**வஸந்த மண்டபம் :**

இம்மண்டபம் தெற்கு வடக்காக ஆலயத்துக்கு வடபால் (தல விருக்ஷத்தின் பக்கம்) அமைந்துள்ளது. இது 9 கலசங்களைத் தாங்கியும் வௌவால் நெத்தி மண்டபமாக எழுப்பப்பட்டுள்ளது. சுற்றிலும் அடிப்பாகத்தில் யாளி, யானை, மகளிர் சிற்பங்கள் அமைத்துள்ளன. இதனை எழுப்பித்தவன் மூன்றாம் குலோத்துங்கன். இதே காலத்தில் எழுப்பப்பட்டதுதான் இவ்வாதீனத்திற்குச் சொந்தமான திருவாலங்காட்டுக் கோயிலும் ஆகும்.

**கருவறை**

ஸ்ரீ மாசிலாமணிப் பெருமானின் கர்ப்பக்கிருகம் 19 அடி 6 அங்குலம் கொண்ட பக்க அளவில் சதுரமாக அமைந்துள்ளது. 1½ அடி அகலமுள்ள

அந்தராளம் இக்கருவறையையும், 20 அடி முன்னோக்கியுள்ள அர்த்த மண்டபத்தையும் மற்றும் மகாமண்டபத்தையும் சேர்ந்தாற்போல் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

**யாகசாலைகள் :**

அம்மன் கோயிலில் 2-ஆவது ஆவரணத்தில் ஈசான மூலையில் மேற்கு நோக்கி ஏகதள விமானத்துடன் ஏககலசத்துடன் ஒன்றும். 3-ஆவது ஆவரணத்தில் ஈசானமூலையில் மகோற்சவ காலங்களில் யாகபூசை நிகழும் சுவாமி யாகசாலை மேற்கு நோக்கி ஏகதள விமானத்துடன் பிறிதொன்றும் இருக்கின்றன.

## திருக்கோயிலில் மற்றைய மூர்த்திகள்

துணைவந்த விநாயகர், சுப்பிரமணியர் – இராசகோபுரத்தின் இரு மருங்கிலும் அமைந்துள்ளனர்.

இராசகோபுரத்தின் உள்ளே இருக்கும் நந்தனவனத்தில் மேற்கு நோக்கிய சந்நிதிகளாக நால்வர், ஆதி கோமுக்தீஸ்வரர் கோயில்கள் தனித் தனியே விளங்குகின்றன.

வரசித்திவிநாயகர் கோயில் – யானைக்கொட்டகையின் இடதுபுறம் தனிக்கோயிலாகக் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இது இவ்வாதீனத்தின் 20–வது பட்டம் ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளால் நூதனமாகக் கட்டுவிக்கப்பட்டு 14—9—1949–ல் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

**சுவாமி சந்நிதி - கிழக்கு ஆவரணம் :**

சோருபாம்பிகை — இலிங்கத்திற்குப் பசுவடிவில் அம்பிகை பாலினை அபிஷேகித்தல். சோழலிங்கம், சனீஸ்வரபகவான் (மற்றைய கிரகங்கள் இத்தலத்தில் இல்லை) பைரவர், பஞ்சலிங்கம் (ஐந்துலிங்கங்கள்) சந்திரன் சூரியன் 3ம் (மூன்று சிலாரூபம்) விளங்குகின்றன.

**தெற்கு ஆவரணம்**

நந்திகேஸ்வரர், விசுவநாதர், விசாலாட்சி, மாணிக்கவாசகர், திருமுறைகண்ட விநாயகர், மற்றும் அறுபத்துமூவருடன் சேக்கிழாரும் விளங்குகிறார்.

**மேற்கு ஆவரணம் :**

கன்னி விநாயகர், ஞானம்பிகை, காளத்தீஸ்வரர். பாண்டியலிங்கம், கொங்கணேஸ்வரர், கொங்கணேஸ்வரி அம்மன். வள்ளிதெய்வயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி, சரஸ்வதி, மீனாட்சி, சொக்கலிங்கம், விசுவநாதர், சேரலிங்கம், மகாலட்சுமி முதலிய மூர்த்திகள் விளங்கு கின்றனர்.

**வடக்கு ஆவரணம்**

இவ்வாவரணத்தில் சண்டிகேஸ்வரர் தென்முகமாகத் தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். அணைத்தெழுந்த நாயகர் சந்நிதியும் (உற்சவமூர்த்தி) அமைந்துள்ளது.

தெற்கு நோக்கி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்காட்சி தருகின்றார். இவரது விமானம் மூன்று கலசங்களுடன் அஷ்டநந்திகளும் இடம் பெற்றுத் தில்லைக்கோயில் விமானம் (காரைப்பூச்சு) போல அமைந்துள்ளது.

**தியாகராஜர் சந்நிதி :**

தியாகராஜரும் கமலாம்பிகையும் அர்த்த மண்டபத்தில் எழுந்தருளி யுள்ளார்கள். இச்சந்நிதியினைத் தொழுதவண்ணம் சுந்தரர் காட்சி தருகிறார் (கிழக்கு ஆவரணத்தில்). கண்ணாடி, நந்தி (தாமிரம்) மகாமண்டபத்தில் அமைந்துள்ளன.

இத்திருக்கோயிலின் சந்நிதியின் வடபுறம் சந்தானாச்சாரியர்களாகிய மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம், மெய்கண்டார், அருள்நந்தி சிவம் திருவுருவங்கள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன.

## முசுகுந்தச் சக்கரவர்த்தி மகப்பேறு பெற்ற வரலாறு

**கயிலாய நிகழ்ச்சி :**

சோலைகள் நிறைந்த கயிலைமலையில் உள்ள வில்வ வனத்தில் சஞ் சரிக்கும் ஒரு குரங்கானது ஒவ்வொரு நாளும் சந்தோஷத்துடன் குதித்து வில்வத்தளிரைப் பறித்துக் கீழே எறிந்து வந்தது. ஓர் நாள் இரவு அவ்விதம் எறியவே அவ்விடத்திலிருக்கும் சிவலிங்கத்தின் முடிமேல் அவ்வில்வத் தளிரானது விழுந்தது.

அன்று சிவராத்திரி நாளாதலினால் இறைவன் பெருமகிழ்ச்சியுடன் கருணை மிகுந்து அக்குரங்கின் உருவத்தை நீக்கி அரச உருவத்தைக்

கொடுத்துச் சக்கரவர்த்தியாக்கி மூன்று உலகங்களையும் அரசாளும்படியான வரத்தைக் கொடுக்க, அம்முசுகுந்தச் சக்கரவர்த்தி இறைவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினுன். இறைவனிடம் தாம் சக்கரவர்த்தியானலும் குரங்கின்முகமும் தேவரீரது திருவடிச் சிந்தனையும் இருக்க அருள வேண்டும் எனப் பிரார்த்தித்தான் அதன்படியே இறைவனும் அருளினுர்.

**தியாகவிடங்கரைப் பெறுதல் :**

மிக்க வன்மை பெற்ற வலாசுரன் என்பான் தேவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தினுன். பலமுறை சேனைகளுடன் சென்று போரிட்டும் இந்திரன் தோல்வியே கண்டான். அவ்வாறு தோற்றுப் போய் பூமிக்கு இந்திரன் வருவதனை அறிந்து முசுகுந்தன் என்ன என்று வினவ, நடந்ததனை இந்திரன் விளக்கினுன்.

முசுகுந்தன் தனது எட்டுச் சகோதரர்களுடனும் இந்திரனது சேனையுடனும் சென்று வலாசுரனை அழித்து, கற்பக நாட்டினை இந்திரனுக்கு அளித்தான். தனக்கு உதவி செய்த முசுகுந்தனை இந்திரன் பாராட்டி, "உனக்கு வேண்டியவற்றைக் கேட்பாயாக : உடன் தருகின்றேன்" என்முன்.

போகவாழ்க்கையையே முக்கியமாகக் கருதியிருந்த இந்திரனுனவன் தன் உயிருக்குயிராகிய தியாகவிடங்கனை மறந்த தன்மையினை இறைவன் முசுகுந்தனுக்கு அறிவித்தார். முசுகுந்தனும் "மயன் உனக்கு அளித்த தியாகேச மூர்த்தியை எனக்கு அருளவேண்டும்" என்று இந்திரனிடம் கேட்டான். இந்திரன் அதுகேட்டு, மதிமயங்கிச் சொல்மாறலாகாது என எண்ணியவனுய் மயனை (தேவதச்சன்) அழைத்து விடங்கேசர் திருவுருவை வெமுென்று உண்டாக்க, அதைக் கொண்டுபோய் இந்திரனுனவன் முசுகுந்தன் கையிலே கொடுக்க அதைவாங்கி மிக்க விருப்பத்துடன் அன்றிரவு பூசை செய்து துயில் கொள்ளும்போது முசுகுந்தனது கனவிலே இறைவன் சென்று 'உனக்கு இந்திரன் இன்று கொடுத்த மூர்த்தி (வீதிவிடங்கன்) நான் அல்ல' என்று சொல்லிப்போக, முசுகுந்தன் விடிந்து எழுந்து இந்திரனிடம் விஷயத்தைத் தெரிவிக்க. மனம் வருந்திய இந்திரன் பின்னும் அதைப் போன்று ஐந்து ஈசர் உருவைக் கற்பித்து (உண்டாக்கி) முசுகுந்தனுக்குக் கொடுத்தான். 'அப்படிப்பட்ட ஐந்து உருவும் நான் அல்ல' என்றுணர்த்தி, 'நுண்மையானதும் செம்மையானதுமான தோடணிந்த தியாகேசரே உண்மையான நான்' என்று முசுகுந்தனுடைய கனவிலே உணர்த்தியருளினுர் இறைவர்.

மறுநாள், முன்னுள் இரவில் இறைவன் கூறிய அடையாளத்தைச் சொல்லி இந்திரனிடம் முசுகுந்தன் கேட்க, மீண்டும் ஏமாற்ற முடியாமல் உண்மையான பூசைக்குரிய சிவனைக் கொண்டு வந்து இந்திரன் கொடுத்தான்.

**சப்தவிடங்கருக்குத் திருக்கோயில் அமைத்தல் :**

முசுகுந்தனனவன் சப்தவிடங்கேசரையும் தேர்மேல் வைத்துப் பூமியில் கொண்டுவந்து. திருநாகைக்காரோணம், திருக்கோளிலி, திருவாய்மூர், வேதாரணியம், திருநள்ளாறு, திருக்காரவாயில் (திருக்காருயில்) ஆக ஆறு இடங்களிலும் கோயில்களை அமைத்து அக்கோயில்களில் எழுந்தருளச் செய்வித்து மிகுந்த சிறப்புக்களையும் செய்வித்தான்.

பின், வீதிவிடங்கத் தியாகேசரை வன்மீக விமலர் என்னும் பிருதுவி இலிங்கத்து அருள் உருவாய் எழுந்தருளியிருக்கும் திருவாரூரில் பொற்கோயில் உண்டாக்கி இறைவியோடும் செம்பொன் மணிச்சப்பரத்துள் விளங்குகின்ற பீடத்திலே எழுந்தருளச்செய்வித்து, செவ்வந்தித்தோடு. இரத்தினகிரீடம், செங்கழு நீர்மாலை, முத்துமாலை, பூணூல் ஆகியவைகளை விளங்க அணிவித்து வீரகட்கம் என்ற இரு செங்கோல்களை இலிங்கத்தின் பக்கத்திலே வைத்து. ஆகம முறைப்படி ஆறுகால பூசையையும் விழாக்களையும் நடத்திக்கொண்டு முசுகுந்தன் அரசாண்டு வந்தான்.

உலகும் உலகத்திலுள்ள போகங்களும் தேகமும் நீர்க்குமிழிபோலத் தோன்றி அழியும் எனத் திருவருளாலே அறிந்தான். மேலாம் வீட்டை அடைய விரும்பி ஒரு நாள் விடங்கத் தியாகேசர் சந்நிதியில் போய்க் கை கூப்பித் தொழுது இந்தப் பூபாரத்தையெல்லாம் சுமப்பதற்கு ஒரு புத்திரனை அருளி, என்னைத் தவஞானச் சிவபக்தர் கூட்டத்துடன் துணையாகச் சேர்த்து ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டினன்.

**துறைசை வளநகர் அடைதல் :**

அன்று இரவு கனவிலே இறைவன் தோன்றி 'இன்னும் உன்னால் யாம் ஏற்றுக் கொள்ளும் பணி உள்ளது. ஆரூர் போலவே இந்தத் துறைசையிலும் யாம் அடைந்திருப்பதால் அந்தலத்தில் பணி செய்து வருங்கால் புத்திரனும் பெற்று மகிழ்வாய்' என்றூர்.

மறுநாள் கனவில் கண்டபடி ஆரூர்ப் பெருமானை வணங்கிப் பல சேனைகளுடன் கோமுத்தி என்று போற்றப்படும் துறைசைத் தலத்தின்

எல்லையை அடைந்தான். கோமுக்தி தீர்த்தத்தில் நீராடி வெண்ணீறணிந்து துணை வந்த விநாயகரை முன்னர் வழிபட்டு, கோபுரவாயிலைக் கடந்து அரசினை வலம் வந்தான். பெரிய திருவுருவாயமைந்த நந்திதேவரைத் தரிசித்து முசுகுந்தன் மாசிலாமணிப் பெருமானின் சந்நிதிக்குப் போகும்போது உண்மை ஞானநோக்கத்தை முசுகுந்தனுக்கு இறைவன் அருளி மாசிலா மணிப் பெருமானே வன்மீக இலிங்கமாகவும் திரு-ஆரூரே அருள் நிறைந்த துறையையாகவும், திருவாரூரைப் போன்றே காட்சி கொடுத்தருளி நர்த்தன மண்டபத்தின் நடுவில் நின்றுவீதிவிடங்கராய் நடித்து மாசிலாமணி இலிங்கத் திருமேனியுள் மறைந்தருளினார். இதனைக்கண்டு முசுகுந்தன் கூப்பிய கரத்துடன் ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்று போற்றித் துதித்தான்.

"போதகம் புரிவாய் போற்றி போதியம்பலத்தாய் போற்றி
மாதவர்க் கரசே போற்றி மாசிலாமணியே போற்றி
கீதமோ டுறையு நாகக் கிண்கிணிச் சரண போற்றி
மேதகு துறைசை வீதி விடங்கனே போற்றி போற்றி"

மாசிலாமணிப்பெருமான் ஆகாயத்தினின்று அசரீரியாக, புத்திரப் பேற்றை இப்போது அளித்தோம். உனக்கு ஞானத்தைப் பின்னர் தருவோம். அதுவரை துறைசையிலிருந்து நம்மைப் பூசிப்பாயாக என்று அருளினார்.

முசுகுந்தன் தமது திருமாளிகையில் இரவு துயில் கொண்டு விடியற் காலையில் எழுந்து காவிரியில் நீராடி, திருநீறணிந்து திருக்கோயிலினை வலம் வந்து தொழுது வந்தார்.

### முசுகுந்தன் நடத்திய ரதசப்தமி :

தை மாத ரதசப்தமி மகோற்சவத்தைத் தானே முன்னின்று நடத்தத் திட்டமிட்டு எல்லா நாட்டவர்க்கும் தூதுவர்கள் மூலம் செய்திகளை அனுப்பியும், திருக்கோயிலினை அழகுபடுத்தியும், தானங்கள் பல செய்தும் வந்தான்.

துறைசையினைக்காவல்புரியும் சாஸ்தா, காளி, முதலான கிராம தேவதை களுக்குப் பத்துநாள் திருவிழாவினைச் சிறப்பாக நடத்தி ஸ்ரீ மாசிலாமணிப் பெருமான் திருக் கோயிலில் துவஜாரோகணம் நிகழச் செய்தான்.

காலையிலும், இரவிலும், ரிஷபம், சூரியன், சந்திரன், மஞ்சம் முதலானவற்றில் சந்திரசேகரரை எழுந்தருளச் செய்து வீதி வலம் நடத்தி ஞன். ஐந்தாம் நாள் விழாவன்று தியாகராஜர் ஆடுவதற்கு மகிழ்ந்து, அடியார்கள் போற்ற அசைந்து ஆடி நர்த்தன மண்டபத்தில் வந்து

திருநடனம் ஆடினார். இப்படியாக ஆடிக் கொண்டே வசந்த மண்டபத்தை அடைந்து சிம்மாசனத்தில் பெருமானை எழுந்தருளச் செய்து ஆதி சைவர்களால் செய்யப்படும் பூசையினை கண்டு களித்தான்.

ஒன்பதாம் திருநாளன்று திருவாரூரில் தியாகராசர் திருத்தேர் விழாக் கொள்வதைப் போலத் துறைசையிலும் தியாகேசப் பெருமானைத் திருத்தேரில் பவனிவரச் செய்து பத்தாம் நாளில் தீர்த்தவாரியினைப் பாங்குற நடத்தினான். மாலையிலே தியாகராஜர் இறைவியோடு எல்லோருக்கும் பேரின்பம் கொடுத்தற் பொருட்டுப் பந்தர்க் காட்சியையும் அருளி, தேவியோடும் திருக்கோயில் சேர்ந்து அமர்ந்தார்.

### முசுகுந்தன் இறைவன் கழல் சேர்ந்தமை :

துறைசையில் நிகழ்ந்த ரதசப்தமி மகோற்சவத்தில் பங்கு கொண்டு பணியாற்றிய அரசர்கள், வேதவிற்பன்னர்கள், ஆதிசைவர்கள், முதலானோர்க்குத் தக்கபடி சன்மானத்தை வழங்கினான்.

### புத்திரப்பேறும் சிவஞானப்பேறும் :

முசுகுந்தனுக்கு இறைவனும் திருவாரூரின் உணர்வை உண்டாக்கி ஆசிரியனாக வந்து ஆட்கொண்டு மூலத்தானத்து இலிங்கத்தில் மறைந்தருளினார். பின்னர் தன் பட்டத்தரசியுடன் திருவாரூர் கோயிலை யடைந்து வன்மீகநாதரைப் புகழ்ந்து பாடினான். தாம் அரண்மனையில் இருந்து வரும் நாளில் இறைவன் திருவருளால் எட்டு சேய்கள் வந்தடைய வடிவழகு வீரம், கருணை, ஒப்புரவு (நடுவுநிலைமை) கலை, அஞ்சாமை, அறிவு, ஊக்கம், பொறை, கொடை இவைகள் அனைத்தும் பொருந்திய மூத்த மகனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து உலகபாரம் அனைத்தையும் தமது மகனிடம் ஒப்படைத்து ஆட்சி செய்து வருக எனக் கூறினான். பின்னர் சிவன் அடியார் கூட்டத்தில் சேர்ந்து இறைவனது திருவடிகளிலே கருத்தைச் செலுத்தி நிட்டை கூடி, ஆரூர் வாழும் இறைவன் கழலடி சேர்ந்தான்.

### அம்மன் கோயில் சந்நிதி :

ஸ்ரீ ஒப்பிலாமுலையம்மை சதுர்புஜங்களாக தாமரை, ஜபமாலை அபய, வரத (கடகசரம்) ஹஸ்தங்களுடன் நின்ற கோலத்துடன் காட்சி தருகின்றாள். துவாரபாலகிகள் இருவர் (சுதைவேலை) நிற்கவும் அவைகளின் இருமருங்கிலும் ஆடிப்பூர அம்மன் சந்நிதியும் பள்ளியறைச் சந்நிதியும் ஏகதளவிமானங்களுடன் உள்ளன. மகாமண்டபத்தின் இடதுபுறச் சுவரில்

ஸ்ரீ நர்த்தன விநாயகர் அமர்ந்துள்ளார். சண்டிகேஸ்வரி கோயில் தனியாக (தெற்குநோக்கி) அமைக்கப்பட்டுள்ளது

**சுவாமி சந்நிதி - கோஷ்டம் :**

ஸ்ரீ மாசிலாமணியீசர் இலிங்கத் திருமேனிகொண்டு அருளுகின்றார். சந்நிதியின் இருமருங்கிலும் டிண்டி முண்டி துவாரபாலகர்கள் நிற்கவும் அவர்களுக்குக் கீழே இருமருங்கிலும் இருவிநாயகர் (கிழக்கு நோக்கி) உள்ளனர். மூலத்தானத்திற்கு எதிரில், நந்தியெம்பெருமானும் (தாமிரம்) கண்ணாடியும் (தாமிரம்) அமைந்துள்ளன.

தேவ கோஷ்டங்களில், தலவிநாயகர், அகத்தியர், தட்சிணாமூர்த்தி – இவர் அருகே பூதங்கள் இரண்டும், கற்றளிப் பிச்சனும்–கற்றளிப்பிச்ச னுர்க்கு இளைய திருநாவுக்கரசு தொண்டராவர். (திருக்கோயிலைக் கட்டிய வர்கள்)கூப்பிய கரங்களுடன் உயரே நடராஜர் திருவுருவமும். லிங்கோத் பவர் (பிரமனும், விஷ்ணுவும் நின்ற கோலத்தில் தனித்தனியாக வழி படல்) பிர்மா (கோமுகியின்மேல்) அஷ்டபுஜதுர்க்கை முதலானோர் சூழவும் நீராழிமண்டபம் அதன்மேல் சுற்றில் நந்திகளும் காணப்படு கின்றன. இவ்விடங்களில் அழகிய சிற்பவேலைப்பாட்டினை நன்கு அறியலாம்.

**திருமூலர் சந்நிதி :**

இத்திருக்கோயிலின் இரண்டு, மூன்று ஆவரணங்களின் சுற்றுச்சுவரை மையமாய வைத்து ஏக தளவிமானத்துடன் இக்கோயில் காணப்படுகிறது. திருமூலரது திருவுருவம் யோகநிலையில் (கிழக்குநோக்கி) அமைந்துள்ளது. திருமூலருடைய சந்நிதி மண்டபத்தின் விமானத்தில் இவருடைய வரலாற்றுநிகழ்ச்சிகள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன. இவ் வாலயத்தின் வாயு மூலையில் அர்த்தமண்டபம். மகாமண்டபம் என்ற முறையில் மற்றதலங்களில் காணப்படாத வகையில் தனிக்கோயிலாக அமைந்துள்ளமை சிறப்புடையது. இன்றும் இவரது சந்நிதியில் (ஐப்பசி அசுவதி) திருநட்சத்திரத்தில் திருமந்திர பாராயணம் செய்து வருகின்றனர்.

## திருமூலர் வரலாறு

திருநந்திதேவர்பால் உபதேசம் பெற்ற சுந்தரநாதன் எனும். சிவயோகியார் திருக்கயிலையிலிருந்து புறப்பட்டுச் சிவதலங்களைத் தரிசித்துக் கொண்டு சோழநாட்டுக் காவிரி சூழ்ந்த திருவாவடுதுறையினை வந்தடைந்தார். பெருமானை வழிபாடாற்றித் திரும்பும்பொழுது, காவிரிக் கரைப் பசும் புல்வெளியில் பசுக்களை மேய்க்க வந்த மூலன் என்பான்

இறந்து படவே அதனைக்கண்ட பசுக்களெல்லாம் தம் தலைவனை இழந்தமையால் கண்ணீர் சொரிந்து பெரும் சோகமுற்று நின்றன. இவ் அவலக் காட்சியைக்கண்ட யோகியார் பசுக்களின் துயரைப் போக்கக் கருதினர். இறந்துகிடக்கும் மூலன் உடல் எழுந்தால் அல்லாமல் பசுக்களின் துயர் நீங்குமாறில்லை என்பதை உணர்ந்து யோகமுறையில் தம் உடலைப் பாதுகாப்பான இடத்தில் கிடத்தி,மூலன் உடம்பில் பரகாயப்பிரவேசமாகப் புகுந்து எழுந்தார். தம் தலைவன் எழுதலைக்கண்ட ஆநிரைகள் மகிழ்ச்சியடைந்தனவாய், மூலன் உடன்வரத் தத்தம் இடங்களைச் சென்றடைந்தன.

மூலன் உடலிலிருந்த சிவயோகியார் திருவாவடுதுறையில் உள்ள ஓர் பொதுமடத்தையடைந்து நிட்டைகூடி இருந்தார். மூலன் மனைவி தன் கணவனைக் காணாது தேடிவந்து இங்குப்பார்க்க, இவர் வாய் பேசாதவராய் யோகநிலையில் இருத்தலை அறிந்தாள்; சுற்றத்தாரிடம் முறையிட்டு அவர்கள் துணையுடன் மூலன் திருமுன்னர் வந்து நிற்க, அவர் "எம்மை நீங்கள் அறியமாட்டீர்கள்: உங்களுடன் எமக்குத் தொடர்பு இல்லை" எனக் கூறினர். உறவினர்களெல்லாம் "இவர் ஞானம் பெற்றார்: உன்னோடு இனி இவர் வாழ்தலைச் செய்யார்; வருந்தாது உனதில்லம் அடைக" என ஆறுதல் கூறி அழைத்துச் சென்றனர்.

முன்பு சிவயோகியரால் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பெற்ற அவரது உடல் இறையருளால் மறைந்தது. மறுநாட் காலையில் யோகியார் தம் உடலிற் சென்று புக அவ்விடத்தில் சென்று தேடியும் அதனைக் காணாதவராய், "மூலன் உடலில் இருக்கவேண்டும் என்பது திருவருள் போலும்" என்பதை உணர்ந்தார். போதியம்பலம், அரசவனம், நவகோடி சித்தபுரம் என வழங்கப்பெறும் இத்துறைசையில் படரரசின் கீழ் யோக நிலையில் வீற்றிருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக 3000 ஆண்டுகள் யோகம் இருந்து 3000 பாடல்களைக் கொண்ட ஆகம சாரமாகத் திகழும் திருமந்திர நூலை அருளிச் செய்தார்.

இத்திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்களை எல்லாம் ஞானம் மிகுந்த சித்தர்கள் ஏட்டிலே எழுதி சைவ நல்லுலகத்திற்கு வழங்கினர்.

* திருமந்திர ஏட்டுச் சுவடிகள் இவ்வாதீனத்துச் சரஸ்வதிமஹால் நூல் நிலையத்தில் பாதுகாக்கப்பெற்று வருகின்றன.

---

** திருமந்திர நூலின் அரிய பொருளறிந்து உலகு இன்புற இவ்வாதீனம் பல ஆண்டுகளாக ஆற்றிவருகின்ற பணிகளை யாவரும் அறிவர்.*

## திருமாளிகைத்தேவர் வரலாறு

இவரது காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டின் முற்பகுதி ஆகும். இவர் சோழநாட்டில் உள்ள திருவிடைமருதூர் தலத்தில் அவதரித்தவர் ஆவர். இவரது வம்சம் அரசர்களுக்குக் குருவாக விளங்கியது. ஒரு நாள் தாம் பார்த்துவந்த அரசாங்க காரியத்தை விட்டுவிட்டு, பக்குவம் வந்த வராய்த் துறைசை அடைந்து படரரசின்கீழ் தியானத்தில் அமர்ந்தார்.

போகரால் ஞான உபதேசம் செய்விக்கப்பெற்றுர். சைவ சமயத்தை வளர்க்கும் பொருட்டு "அருட்டுறை மடம்" ஸ்தாபித்தார். தமது தவப்பயன் காரணமாகக் கண்டார் காமுறும் உடலழகையும் பெற்றுர்.

**திருமாளிகைத்தேவர் சித்தின் பெருமை :**

ஒருசமயம் இவர் காவிரியில் நீராடி, இறைவன் திருமஞ்சனத்திற்காகக் குடத்தில் நீர் கொண்டு வருகையில் பிணம் ஒன்று எதிர்ப்படவே வானில் திருமஞ்சனக் குடத்தை எறிந்து நிற்கச்செய்தும், பிணத்தைச் சுடுகாடு மட்டும் நடந்து செல்லுமாறு பணித்தும் தூய்மை கெடாது திருமஞ்சன தீர்த்தத்துடன் தம் திருமடத்தை அடைந்தார்.

திருவீழிமிழலையில் பலராலும் இழுக்கமுடியாத நிலையிலிருந்த தேரினைத் தம்மொடு கயிற்றுல் இணைத்துக்கொண்டு நான்கு வீதிகளிலும் ஓடிவரச் செய்தார்.

மாதர்கள் இவரது பேரழகினையே எப்போதும் எண்ணி வாழ்ந்தனர். அவரது அழகிய உருவம் மனத்தில் இருந்தமையால் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் எல்லாம் திருமாளிகைத் தேவர் திருவுருவத்தைப் போன்று காணப்படலாயினர். இதனைக்கண்ட அம்மகளிரின் கணவன் மார்கள் திருமாளிகைத் தேவர்பால் பழி சுமத்தி நரசிங்க மன்னனிடம் முறையிட்டனர். அரசன் ஆணைவழி இவரைக் கட்டி இழுத்துவர வந்த வீரர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு சென்று மன்னன் முன் நின்றனர். மன்னன் படைவீரர்களுடன் போருக்கு வர அம்பிகை அருளால் மதில்களில் இருந்த நந்திகள் எல்லாம் எழுந்து சென்று அம்மன்னனையும் அவன் படைகளையும் வென்று கட்டி இழுத்துவந்து திருமாளிகைத்தேவர் முன் மண்டியிடச் செய்தன.

போகர் ஒருநாள் துறைசைப் பெருமானை வழிபட்டுத் தம் திருமடத்திற்கு எழுந்தருளும் சமயம், தீவர்த்தி ஏந்தும் ஆள் இல்லாமையால் திருமாளிகைத்தேவர் தீவர்த்தியினை ஏந்திவர, போகர்

தேவர் என எண்ணாமல் தம்மடத்தின் முகப்பிலே நில் எனப் பணித்தார். கோயிலில் சுவாமி தரிசனத்திற்கு வந்த அனைவருக்கும் கொடுத்த பயற்றஞ் சுண்டலை இரவு முழுதும் கையில் ஏந்திய வண்ணம் இருந்து, மறுநாள் போகர் உத்தரவு பெற்றுச் சென்றார்.

ஒருகையில் தீவர்த்தியும், மறுகையில் பயற்றஞ் சுண்டலையும் ஏந்தி இருந்தபடியால் தமது தபோ பலத்தினால் மேலும் இரண்டு கைகளைப் பெற்றுக் குரு பணியில் ஈடுபட்டார். வெந்த பயறு இரவு முழுவதும் இருந்தமையால் தம் ஆட்களைக் கொண்டு மடத்தின் புழக்கடையில் பாத்தி கட்டி விதைக்கவே பயறுமுளைத்துப் பலன் தந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

**சிவபூசையின் பெருமை :**

போகர் திருமாளிகைத் தேவருக்குச் சிவபூசையையும் கருவூர்ச் சித்தருக்குச் சத்தி பூசையையும் செய்ய உபதேசித்தார். ஒரு நாள் சிவபூசையின் பிரசாதத்தினைக் கருவூர்ச்சித்தருக்குக் கொடுக்கவே அவரும் ஏற்றுக் கொண்டார். மற்றொருநாள் கருவூர்ச் சித்தர் தம் சத்தி பூசைப் பிரசாதத்தைத் தேவருக்குச் சேர்ப்பிக்குங்கால் அது நிர்மாலியம் என ஏற்கவில்லை. போகரிடம் சித்தர் இதனை முறையிட, " அதுசரியே " எனப்போகர் கூற, திருமாளிகைத்தேவர் சித்தருக்குச் சிவபூசையின் மகத்துவத்தை உபதேசித்தார்.

**நூலும் - அருளும் இடமும் :**

திருமுறைகளில் 9-ஆம் திருமுறையாக விளங்குவது திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்பன. இத்திருமுறையை அருளிச்செய்த ஒன்பது அருளாளர்களில் இவரும் ஒருவர் ஆவர். இவ் வொன்பதின்மரும் அருளியது திருவிசைப்பா ஆகும். இதன் பாடற்றொகை 288. திருப் பல்லாண்டு அருளியவர் சேந்தனார் ( 13 பாக்களை அருளினார் ) ஆக இத் திருமுறை 301 திருப்பாடல்களைக் கொண்டதாகும். திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவில் நான்கு பதிகங்களை அருளிச் செய்தார். ஆனால் இத் திருவாவடுதுறையைப் பற்றித் தம் பாடலில் குறிப்பிடாதது ஏனோ ?

இவர் தம் குருவின்மீது இருந்த பக்தியின் காரணமாக அவரது திருவடியினைத் தம் முன்னே வைத்துத் தாம் அதன் பின் யோகநிலையில் அமர்ந்த காட்சியில், இவ்வாதீனப் பிரதம பரமாசாரியராக விளங்கும் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் திருக்கோயிலின் இடது பாகத்திலே தனித் திருக் கோயிலில் இருந்து அருள்புரிகின்றார். ( இவ்விடத்தினை இத்திரு மடத்துள்ளே தரிசிக்கலாம்).

**தூண்களில் சிற்பங்கள் :**

இவ்வாலயத் தூண்கள் பெரும்பாலும் செவ்வக வடிவத்தில் அமைந்தவையாகும். இதில் பூ வேலைப்பாடுகளும், சிங்கம், தாமரை மொட்டு முதலியன ஒரே நேர்க்கோட்டில் உச்சியில் அமைந்துள்ளன.

சுவாமி சந்நிதித் தூண்களில் புடைப்புச் சிற்பங்கள் இரண்டு அடி முதல் மூன்று அடிக்குள்ளாக அமைந்துள்ளன. மகாமண்டப இடது பக்கத் தூண்களில் நின்றகோலத்தில் அரசன், மந்திரி, தம்பிரான் சுவாமிகள் ஸ்தபதி சிற்பங்களும் அவன் வலது பக்கம் அளவுகோல் வடிவமும் உள்ளன.

தியாகராஜர் சந்நிதியின் மகாமண்டபத் தூண்களில் இரண்டு அடி கொண்ட புடைப்புச் சிற்பங்களாக வியாக்ரபாதர், பதஞ்சலி, சுந்தரர், பரவையார் உருவங்கள், உள்ளன. முசுகுந்தமன்னன் உருவத்திற்கு எதிரே கூப்பிய கரத்துடன் மந்திரிபோன்ற ஒரு சிற்பமும் அமைந்துள்ளது.

சுவாமி கோயிலில் சுப்பிரமணியர் சந்நிதிக்கு நேராக மேற்கு ஆவரணத் தூண்களில் இவ்வாதீன இரு மகாசந்நிதானங்களின் திருவுருவங்கள் சர்வா பரணங்களுடன் கிழக்குநோக்கியும், 14 – ஆவது பட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் திருவுருவமும் (1789–1843). தம்பிரான் ஒருவரும் நின்று கூப்பிய கரங்களுடன் காட்சியளிக்கின்றனர்.

அம்மன் சந்நிதி முன்னர் உள்ள மண்டபத் தூண்களில் கூப்பிய கரங் களுடன் இவ்வாதீன மகாசந்நிதானங்களின் திருவுருவங்களும் தம்பிரான் சுவாமிகளின் திருவுருவம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

பெரியநந்தி, முன் இருமருங்கிலும் 4 அடி உயரமுள்ள குலோத்துங்கன் உருவமும் வில்லையும், அம்பையும் ஏந்திய ஒரு சிலையும் உள்ளன.

நந்தியின் பின்னால் பலிபீடத்தின் கீழ் ஒன்றரை அடி உயரமுள்ள நான்கு பூதகணங்கள் நாற்றிசைகளை நோக்கி நின்றுகொண்டுள்ளனர். அதன் எதிரேயுள்ள தூண்களில் மகாசந்நிதானங்கள் – ஸ்ரீ வேலப்பதேசிகர் ஸ்ரீ பின் வேலப்பதேசிகர் திருவுருவங்கள் கூப்பிய கரங்களுடன் சுவாமி யினைத் தொழுதவண்ணம் காணப்படுகின்றன. ஒரு தூணில் இவ்வாதீனக் குலதெய்வமாகப் போற்றப்படும் திராவிட மாபாடியகாரர் ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் திருவுருவமும் அமைக்கப்பட்டுள்ளது இம்மண்டபம் ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமிகள் காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

(சுமார் 205 ஆண்டுகளுக்கு முன்) சிற்பங்களின் கீழே பெயர்கள் காணப்படாவிட்டாலும் தோற்றத்தின் மூலமாகவும் கட்டுமான விதத்திலும் அறிய முடிகிறது.

**உற்சவ மூர்த்திகள் :**

விநாயகர், சந்திரசேகரர் — அம்மனுடன், வள்ளி தெய்வானை சமேதராக ஸ்ரீ சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர், அஸ்திரதேவர், பிரதோஷநாயகர் – அம்மனுடன், முத்துக்குமாரசாமி ( வள்ளி தெய்வானை நிற்கவும் மயில்மீதமர்ந்து நான்கு கரங்களுடன் ) கல்யாணசுந்தரர் — அம்மனுடன் ( நின்றகோலம் ) பிட்சாடனர், திருமூலர், திருமாளிகைத் தேவர், அப்பர், சம்பந்தர், ( ஓர்விரலைக்காட்டிநிற்றல் ), சுந்தரர், மாணிக்க வாசகர், ஸ்ரீசாஸ்தா, ஸ்ரீமாரியம்மன், ஸ்ரீபிடாரி அம்மன், போகசக்தி யம்மன், ( சுவாமி கர்ப்பக்கிருகத்தில் ) ஸ்ரீ பள்ளியறைச்சொக்கர், தியாகராஜர், கமலாம்பிகை (சோமாஸ்கந்தர் திருவுருவமே தியாகராஜரர்கக் காட்சியளித்தல்) அணைத்தெழுந்தநாயகர், (சுவாமி, அம்பாளின்பூசையினை ஏற்று அம்பாளின் தோளின் மேல் தமது இடது கையினை வைத்து லாவண்யமாக அணைத்துக்காட்சி கொடுத்தல். இதில் சுவாமியின் கரம் அம்பிகையின் தேகத்தில் எவ்விடத்தும் படவில்லை. எங்கும் காணப்பெறுத் தெய்வாம்சம் பொருந்திய கலைப்பொக்கிஷம்) ஸ்ரீநடராஜர், சிவகாமசுந்தரி, இருமருங்கிலும் அனிந்திதை, கமலினி ஆடிப்பூர அம்மன், பள்ளியறை அம்மன் முதலிய உற்சவமூர்த்திகள் உள்ளனர்.

**ஆபரணங்கள் :**

சுவாமிக்குக் குவளை (பாணத்திற்குமட்டும்) நெற்றிப்பட்டம், நாகாபரணமும்; அம்பாளுக்குக் கிரீடம், நெற்றிப்பட்டம், பொட்டு, புல்லாக்கு, நத்து, கண்டாபரணமும் ஊர்த்துவ ஹஸ்தத்தில் பத்மாட்சமாலை அபய ஹஸ்தம், பாதங்கள், முதலியவற்றிற்கு வெள்ளிக்கவசங்களும், சனீஸ்வர பகவானுக்கு வெள்ளிக்கவசமும் உற்சவமூர்த்தியானசுவாமி அம்பாளுக்குக் கிரீடம் முதலான திருவாபரணங்களும் சாத்தப்பெறுகின்றன.

**வெள்ளி வாகனங்களும், படிச்சட்டங்களும் :**

பிரதோஷ நாயகர் எழுந்தருளும் வெள்ளி ரிஷபம் 1

மயில வாகனம் –1

தியாகராஜர் – வெள்ளிப்படிச்சட்டம். கமலாம்பிகைக்கு வெள்ளித் தொட்டிப் படிச்சட்டம்.

**மரவாகனங்கள்**

அன்னவாகனம் - பெரியதும் சிறியதுமாக இரண்டு. கிளிவாகனம், குதிரை வாகனம் - பெரியதும் சிறியதுமாக இரண்டு. சிம்மவாகனம். யானைவாகனம். ரிஷபவாகனம். கற்பக விருக்ஷம். சூர்யபிரபை ஆட்டுக் கடாவாகனம். (சிறியது) சூரன், பூதம். அஸ்திரதேவர் பல்லக்கு, நாற்காலி மஞ்சம் டேராஉள்பட, மகாவிஷ்ணு படிச்சட்டம். பெரியசூரன் படிச் சட்டம், தியாகராஜர் அபிஷேக பீடம். சுவாமி அபிஷேக பீடம், மற்றும் வாரைகள், சக்கரங்கள், சட்டத்தேர் மற்றும் சகோபுரத்திற்கு உண்டான தளவாடங்கள் முதலியன உள்ளன.

இத் திருக்கோயிலில் நாள்தோறும் ஆறுகால பூஜைகள் நிகழ்கின்றன.

**பூஜா காலம்** :

| | | | |
|---|---|---|---|
| உஷக்காலம் | — | 6-00 | மணிக்கு |
| காலசந்தி | — | 10-30 | ,, |
| உச்சிக்காலம் | — | 12-00 | ,, |
| சாயங்காலம் | — | 5-00 | ,, |
| இரண்டாங்காலம் | — | 8-00 | ,, |
| அர்த்தஜாமம் | — | 9-00 | ,, |

**இவ்வூரில் உள்ள மற்றைய கோயில்கள்** :

தேரோடும் வீதிகளின் நான்கு மூலைகளிலும் விநாயகர்கோயில்கள் அமைந்துள்ளன. திருக்கோயிலின் வடபால் திருமதிலை ஒட்டி பத்ர காளியம்மன் கோயிலும் தெற்கு எல்லையில் மஞ்சளாற்றின் கரையில் வெள்ளை வேம்பு மாரியம்மன் கோயிலும் மேற்றிசையில் திரெளபதியம்மன் கோயிலும் வடக்கு ரதவீதியின் நடுப்பாகத்தில் வீரபத்திரர் கோயிலும் அதன் அருகில் சிவஞானசித்தர் கோயிலும் வடக்கு எல்லையில் அய்யனார் கோயிலும் உள்ளன.

## கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயிலில் பிற்காலச் சோழமன்னர்களாகிய முதலாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், அவனது

* இரண்டாங்கால பூசையில் இவ்வாதீனத்துத் தம்பிரான் சுவாமிகள் வந்திருந்து வழிபாடு செய்வார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஒவ்வொரு குருவாரம் காலையிலும் விசேஷ தினங்களிலும் வழிபாடுசெய்ய எழுந்தருளுவார்கள்.

மகனாகிய விசயராசேந்திரன், முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜராஜதேவன் முதலானோர் காலக் கல்வெட்டுகளும் பாண்டியர்களுள் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் இருக்கின்றன. இக்கோயிலில் ஒன்பது கல்வெட்டுக்களுக்கு மேல் உள்ளன.

**திருக்கோயில் எழுப்பித்த காலம் :**

இத்திருக்கோயிலில் தில்லைச் சிற்றம்பலத்தை பொன் வேய்ந்த முதற் பராந்தக சோழன் காலத்தில் பொறிக்கப்பெற்ற ஒன்பது கல்வெட்டுகள் இருக்கின்றன. இப்பராந்தகசோழன் கி. பி. 907 முதல் கி. பி. 948 வரை சோழமண்டலத்தை ஆட்சி புரிந்தான். இவன் தனது முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் (கி. பி. 945) 500 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். அப்பொன்னைக்கொண்டு இக்கோயில் குடப்படை பீடத்துக்கு மேல் திருபணி செய்யப்பட்டது. எனவே இத்திருப்பணி முடிவு பெற்றுக் கும்பாபிஷேகஞ் செய்யக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டும். எனவே கி. பி. 947 இல் தனது ஆட்சியின் இறுதிக் காலத்தே இன்றைக்கு சுமார் 1053 ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயில் கற்றளியாக ஆக்கப்பெற்றதாகும் எனக் கணக்கிடப் படுகிறது.

**கற்றளியாக எழுப்பியவன் :**

முதற்பராந்தகன் காலத்தில் இக்கோயிலைக் கருங்கற்கோயிலாகக் கட்டியவன் கற்றளிப்பிச்சன் என்பவன். இவன் உருவம் கர்ப்பக்கிருகத்தின் தென்புறத் தேவகோஷ்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி திருவுருவத்திற்குக் கீழ்ப்புறத்தில் கைகளை மார்பிற்கு நேரே வைத்துக் குவித்து, திருவாவடுதுறை உடையாரை வழிபடும் நிலையில் அமைந்துள்ளது. கற்றளிப்பிச்சன் என்று அவனது தலைக்குமேல் செதுக்கப்பட்டுள்ளது. (பிச்சன் -அன்புடையவன் எனப் பொருள்படும்) "நின் கோயில்வாயிலில் பெரிய பிச்சனுக்கினாய்" என்பது திருவாசகம்.

இக்கற்றளிப்பிச்சன் பிரதிமத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் கைகளைத் தலைமேல் குவித்து வழிபடும் மற்றொரு உருவம் இருக்கின்றது. இவன் கற்றளிப்பிச்சனார்க்கு இளைய திருநாவுக்கரைய தொண்டராவர்.

**கற்றளிப்பிச்சனார் இக்கோயிலைக்கட்டினார் என்பதற்கு ஆதாரங்கள் :**

ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரைகொண்ட கோப்பரகேஸரி வன்மற்கு யாண்டு இருபத்தைந்தாவது தென்கரைத் திருவழுந்தூர் நாட்டுப் பிர்மதேயம்

சிற்றுணேச்சூர் சபையோம். இவ்வூர் கவிசங்கரன் மாறனிடைத் திரைமூர் நாட்டு பிர்மதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை கற்றளி எடுத்த பித்தன் மஹாதேவருக்கு உவச்சப்புறமாக விலைகொண்ட நிலம் பதிணெருமாச் செய்யும்" என்னும் கல்வெட்டுப்பகுதி விளக்குகின்றது. இக்கல்வெட்டுப் பகுதி கோஷ்டத்தில் உள்ள அகத்தியர் திருவுருவத்திற்கு மேற்குப் பக்கத்தில் இருக்கிறது. உவச்சர் என்பார் சங்கு, காளம், இவைகளை ஊதுபவர். புறம் = நிவந்தம். உவச்சபுரம் – என்பது சங்கு. காளம் இவைகளை ஊதுபவர்களுக்கு நிவந்தமாக அளிக்கப்பெற்றது எனப் பொருள்படும்.

**கோயிலின் சில பகுதிகளைச் செய்வித்தவர்கள் :**

அர்த்த மண்டபத்தின் வடபால், துர்க்கா தேவிக்குக் கிழக்குப் பக்கத்தில் திருவாவடுதுறை உடையாரைத் தொழுவாராக ஒரு ஆடவரின் உருவமும் அவ்வுருவத்திற்குப் பக்கத்தில் ஒரு அம்மையாரின் உருவமும் இருக்கின்றன. இவர்கள் இக்கோயிலில் ஒருபடை (Atier) செய்வித்தவர் ஆவர். இவ்வுருவங்களுக்கு அருகில் "இக்கோயிலில் ஒரு படை செய்வித்சு நின்றுன் வாமபூசலுடையான் எழுவன் சந்திரசேகரன் இவன் பின்பே நின்றுன் பெரிய வேளத்து வானல்லடிகள் நக்கன்" என்று பொறிக்கப் பட்டுள்ளன.

அர்த்த மண்டபத்தின் தென்பாகத்தில் பிள்ளையார் திருமேனிக்குக் கிழக்குப் பக்கத்தில் "கல்கட்டு வித்தார் பல்லவ மகா தேவியார் சிவகாமு" என்று செதுக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வம்மையாரும் இப்பகுதியைக் கட்டுவதற்கு உதவி செய்தவர் ஆவர்.

கர்ப்பக்கிருகத் தெற்குப்புறத் தேவகோஷ்டத்தில் தட்சிணமூர்த்தித் திருமேனிக்கு மேற்குப் பக்கத்தில் கைகளைத் தலைமேல் குவித்து வணங்கும் வண்ணம் ஒரு பிரதிமம் இருக்கிறது. அதன்கீழ் ஸ்ரீ திருவாவடுதுறை உடையார் அடியான் அம்பலவன் திருவிசலூரான் திருநாவுக்கரையன் என்று செதுக்கப்பட்டுள்ளது. இவனும் இத்திருப்பணிக்கு உதவியளித் திட்டவன் ஆவான்.

இத்தட்சிணமூர்த்திக்கு மேற்குப் பக்கத்தில் இருக்கும் பிரதிமம் "மிறைக்கூற்றத்து வீரமாங்குடி உடையானது" ஆகும்.

அர்த்த மண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் வாசலுக்கு வடபால், மார்பில் கைகளைக் குவித்துக்கொண்டு இறைவனை வழிபடும் நிலையில் செதுக்கப்பட்டிருக்கும் பிரதிமம் திருநரையூர் நாட்டுச் சிற்றடியான் தாமன் அம்பலவனுன நமசிவாயனுடையதாகும்.

**கல்வெட்டுகளில் இறைவன் இறைவி திருப்பெயர்கள் :**

திருவாவடுதுறைத்தேவர். திருவாவடுதுறை ஆழ்வார் திருவாவடுதுறை உடையார், திருவாவடுதுறைப் பெருமான் அடிகள் என்றும், மிகப் பிற்காலத்துக் கல்வெட்டில் கோமுக்தீஸ்வரர் என்றும், இறைவியை அதுலகுசநாயகி என்றும் பெயர்கள் பொறிக்கப் பட்டுள்ளன.

**மிகப் பழங்காலத்தில் இக் கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனிகள் :**

சிற்றம்பலத் திருமேனி முதல் ஆடி அருளும் உடையாரும், ஆட்டத்திற்கு வாசிக்கும் பூதமமைத்த பீடமும் பிரபையும் (திருவாசி) உட்பட முழ உயரத்து ஒருவர். இவர்நம் பிராட்டியார் பீடமும் பிரபையுமுள்பட இருந்த ஒரு முழமும் ஆறுவிரல் உயரத்து ஒருவர்.

சந்திரசேகர தேவர் பீடமும் பிரபையும் உட்பட இருமுழ உயரத்து ஒருவர். இவர் நம்பிராட்டியார் பத்மத்தோடும் ஒருமுழ உயரத்து ஒருவர். திரிபுவன சுந்தரர் பீடமும் பிரபையும் உட்பட மும்முழ உயரத்து ஒருவர் கணபதியார் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழ உயரத்து ஒருவர்; சந்திரசேகர தேவர் பீடமும் பிரபையும் ஒரு சாணும் ஒரு விரல் உயரத்து ஒருவர்.

க்ஷேத்திரபால தேவர் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழ உயரத்து ஒருவர். மேற்படி தேவர் பீடம் உட்பட ஒரு சாணே நால்விரல் உயரத்து ஒருவர். இடபவாகன தேவரும் பிராட்டியாரும், இடபமும், பீடமும் பிரபையுமுட்பட மும்முழ உயரத்து ஒருவர். பிச்சத்தேவர் மானும் பூதமும் பீடமும் பிரபையும் உட்பட இருமுழ மூவிரல் உயரத்து ஒருவர். அர்த்தநாரித்தேவர் பத்மத்தொரு ஒருமுழமும் ஒட்டை உயரத்து ஒருவர். தட்சிணாமூர்த்தி ஒருமுழ உயரத்து ஒருவர்.

பள்ளிக்கட்டில் நம்பிராட்டியார் பீடமுட்பட இருமுழ உயரத்து ஒருவர். அஸ்திரதேவர் நடுவுமாகத் தண்டொடும் ஒருவர். இடபதேவர் பீடமுட்படத் திருக்காம்பு அளவும் ஈரொட்டை உயரத்து ஒருவர் சண்டேசுவர தேவர் பீடமுட்பட இருந்த ஒருமுழ உயரத்து ஒருவர். திருநாவுக்கரைய தேவர் ஒருமுழமும் நான்கு விரல் உயரத்து ஒருவர். சிவஞானசம்பந்த அடிகள் பீடமும் பிரபையும் உட்பட ஒருமுழமும் ஆறுவிரல் உயரத்து ஒருவர். நம்பி ஆரூரனர் பத்மத்தோடு ஒரு முழமும் ஆறுவிரல் உயரத்து ஒருவர். திருக்காளத்திப்பிச்சர் தம்மையாக வார்த்த ஒருமுழ உயரத்து ஒருவர்.

**பாத்திரங்களும் குத்து விளக்குகளும் :**

( வெண்கலம், பித்தளை, செம்பு, தரா இவைகளால் செய்யப்பட்டவை ):

வெண்கலம் முதல்உரு ஐம்பத்து மூன்றினுல் வெள்ளிக் கோலால் நிறை ஆயிரத்து நாநூற்று இருபத்து முப்பல வரை, பித்தளை முதல் உரு மூவண்டினுல் மேற்படி கோலால் நிறை நூற்றேழுபலம். செப்பு முதல் உரு எழுபதினுல் மேற்படி கோலால் நிறை தொள்ளாயிரத்து இருபத்தைம் பலனே கஃசு. தராமுதலுரு நாற்பத்து நாலினுல் மேற்படி கோலால் நிறை இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைம் பலவரை. தராகுத்திவிளக்கு கருவும் உட்பட விளக்கு முப்பது. இவ்வூர்க் கவுணியன் இந்திலத்தாளுகை வார்த்த விளக்கு ஒன்று ஆக விளக்கு முப்பத்தொன்று.

**அணிகலன்களும் பரிகலன்களும் :**

உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர் நம்பிராட்டியார், திரைலோக்கிய மாதேவியாரின் தாயாரான இராமன் அபிமான தொங்கியார், திருவாவடுதுறை உடையார்க்கு அமுது செய்தருள வெள்ளித் தளிகை ஒன்று குடிஞைக் கல்லால் எழுபதின் கழஞ்சு நிறை உள்ளதும், உடையார்க்குப் பொற்கொள்கை ஒன்று. குடிஞைக் கல்லால் செம்பொன் நாநூற்று ஒருபத்து முக்கழஞ்சரை நிறையுள்ளதும் ஆகிய இவ்விரண்டையும் கொடுத்திருந்தனர். உடையார் இராசாயிராச தேவர் பெரிய வேளத்து அலோயன் அணுக்கி, மேற்படி வேளத்து மற்றொரு அம்மையார் இவர்கள் கொடுத்த பொன்னுல் பொற்பூ இருபத்தேழு செங்கழுநீர்ப்பூ முப்பத்தாறு, மாந்தளிர் ஒன்று, பிட்சதேவர் கண்டக் காறை ஒன்று, பொற்கை ஈச்சோப்பி ஒன்று இவைகள் செய்யப்பெற்று அணிவிக்கப்பெற்று வந்தன.

**திருவிழாச் செய்திகள் :**

இத் திருக்கோயிலில் புரட்டாசி மாதத்தில் ஏழுநாட்களில் திருவிழா நடைபெற்று வந்தது. அக்காலம் மூல நட்சத்திரத்தன்று கொடியேறி பூரட்டாதி நட்சத்திரத்தன்று தீர்த்த மாடுவது வழக்கம். இச் செய்தி, "திருமா எடுத்த நாள் மூல முதல் அடக்கடவ அரிசி அரிய சிவயோகி களுக்கும்: பத்தர்களுக்கும், மாகேசுவரர்களுக்கும் அரிசி தூணியும், பூரட்டாதி அன்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி தூணிப் பதக்கும், பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி கலமும், உத்திரட்டாதி அன்று சிவயோகிகளுக்கு அரிசி கலமும் பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி முக்கலமும், திருவோணத்தன்று சிவயோகி களுக்கு அடும் அரிசி

இருகலமும், பன்மாகேசுவரர்களுக்கு அடும் அரிசி ஆறு கலமும், அவிட்டத்தினன்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி முக்கலமும் பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி ஏழுகலமும், சதையத்தன்று சிவயோகி களுக்கு அடும் அரிசி நாற்கலமும், பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி எண் கலமும், தீர்த்தமாடும் பூரட்டாதி ஞான்று சிவயோகிகளுக்கு அடும் அரிசி ஐங்கலமும் பன்மாகேசுவரர்க்கு அடும் அரிசி பன்னிரு கலமும் ஆக இவ்வேழு நாளும் அடக்கடவ அரிசி ஐம்பத்திருகலமும்" என்னும் மிறைக்கூற்றத்து வீரமாங்குடி உடையான் தாயங்காடன் என்பவன். மதிரை கொண்ட கோப்பரகேசரிவர்மரின் முப்பத்தாறும் ஆண்டில் இவ்விழாவிற்கு வரும் சிவயோகிகளுக்கும், பன்மாகேசுவரர்களுக்கும் ஊட்டுட்டின்பொருட்டு சிறுபுலியூரிலும் சிற்றூனைச்சூரிலும் நில நிவந்தம் அளித்துள்ள கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

### திருமூலர்கோயில் கல்வெட்டு :

மேற்படி விழா முடிவுநாளாகிய புரட்டாசிப் பூரட்டாதி நாளில் திருமூல நாயனரது நாடகமும் ஆரியக்கூத்து ஏழு அங்கமும் நடத்தப் பெற்றுவந்தன. இச்செய்தி இக்கோயில் கர்ப்பக்கிருகத்தின் மேற்குப்புறச் சுவரில் பொறிக்கப் பெற்றுள்ளது முதலாம் இராசராசசோழதேவரது ஒன்பதாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டினுல் புலப்படு கின்றது.

### மகாமண்டபத்தைக் கட்டியவன் :

இக்கோயில் மகாமண்டபத்தைக் கட்டியவன் இளங்காரி குடையான் சங்கரதேவன் ஆவான். இத்திருப்பணிக்குத் திருவெண்காடு உடையான் அனங்கனும் உதவி செய்துள்ளான். இவைகளை இம்மண்டபத்தின் உள்பக்கத்தில் இருக்கும் தூண் ஒன்றில் "ஸ்வதிஸ்ரீ இத்திருமண்டபம் இளங்காரி முடையான் சங்கரதேவன்" என்னும் கல்வெட்டாலும்; இம்மகாமண்டபத்தின் தென்பக்கமுள்ள ஒரு தூணின் பொதியக் கட்டையில் உள்ள "இக்கல் திருவெண்காடு உடையான் அனங்கன் திருப்பணி" என்னும் கல்வெட்டாலும் அறியலாம்.

### திருமடங்கள் :

இவ்வூரில் முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் திரு நீலவிடங்கள் மடம், திருவீதிமடம், நாற்பத்தெண்ணாயிரவர் மடம், என்னும் பெயருள்ள திருமடங்கள் பல இருந்தன.

**அறச்சாலைகள்**

இவ்வூரில் விக்கிரமசோழன் காலத்தில் பெருந்திருவாட்டி அறச்சாலை, சங்கரதேவன் அறச்சாலை, முந்நூற்று அறுபத்து நால்வன் அறச்சாலை என்னும் அறச்சாலைகள் இருந்தன. இவற்றுள் பெருந்திருவாட்டி என்னும் அறச்சாலை, கங்கைகொண்ட சோழபுரத்துக் கங்கை கொண்ட சோழன் திருக்கொற்றவாசலில் புறவாயில் சேநைபதியாக இருந்த இளங்காரி குடையான் சங்கரன் அம்பலன் கோயில் கொண்டானை அனந்தபாலன் என்பவனால் நிறுவப்பெற்றதாகும்.

சங்கரதேவன் அறச்சாலை திருவாவடுதுறை உடையார் கோயில் சிவலோக நாயகன் திருவாசலின் முன்பக்கத்தில் இருந்தது. மேற்குறித்த மடங்களிலும் அறச்சாலைகளிலும் திருவாவடுதுறை உடையார் திருநாளில் அடியார்களுக்கும், தபசிகளுக்கும் அநாதைகளுக்கும் அமுது அளிக்கப் பெற்று வந்தன. முந்நூற்று அறுபத்து நால்வன் அறச்சாலையில் *மருத்துவ நூல் படிப்பவர்களுக்கும், இலக்கணம் படிப்பவர்களுக்கும் அமுது அளிக்கப்பெற்று வந்த செய்தி குறிப்பிடத் தக்கதாகும், இவைகளன்றி முதலாம் இராஜேந்திரசோழன் கல்வெட்டில் சர்வதேவன் திருமடம் என்றும் குறிக்கப்பெற்றுள்ளது.

**நடனசாலை :**

இத்திருக்கோயிலில் முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் நாலுவித நடனசாலை என்னும்பெயருள்ள நடனஅரங்கம் இருந்ததாக அறியப்படுகிறது.

**நிவந்தங்கள் :**

இக்கோயிலைக் கட்டிய கற்றளிப் பிச்சன் திருப்பதியம் பாடுவார் ஒருவர்க்கும்; திருமஞ்சன மாட்டுவார்க்கும், உவச்சர்களுக்கும், மடத்துக்கும் சிற்றுனைச்சூரில் நிலம் வாங்கி அளித்துள்ளான். கோப் பரகேசரிவர்மர் அதாவது முதற்பராந்தக சோழன் காலத்தில் இந்நிவந்தம் செய்யப் பெற்றதாகும்.

**இதை உணர்த்தும் கல்வெட்டு பின்வருமாறு :**

"ஸ்வஸ்திஶ்ரீ கோப் பரகேசரிவன்மற் கியாண்டு (மூன்று)வது திருவாவடுதுறை கற்றளிபிச்சநேன். சிற்றுனைச்சூரனுன் விலைக்கறக் கொண்டு மேற்புலத்து வடக்கடையைத் திருப்பதியம் பாடுவாரொருவற்கு அறுமாவும், இதன் தெற்கடை காற்செய திருமஞ்சனமட்டுவரார்க்குக்

காலும், இதன் தெற்கடையைத் திருஉவச்சர்களுக்குக் காணிமடத்துக்கும் காலுமாக நிவந்தஞ்செய்து குடுத்தேன். கற்றளிப்பிச்சனின் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

( இக்கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் கிழக்குப்புறச் சுவரில் வாசலுக்கும் துவாரபாலகர்க்கும் வடபால் இருக்கின்றது. )

**திருமூலர் நாடகம் நடிக்கவும் ஆரியக்கூத்து ஏழு அங்கம் ஆடுவதற்கும் அளித்த நிவந்தங்கள் :**

இந்தச் செய்தி முதலாம் இராஜராஜ சோழனின் ஒன்பதாமாண்டுக் கல்வெட்டில் உள்ளது.

திருவாவடுதுறை உடையாரின் திருவிழா முடிவுநாளில் அதாவது புரட்டாசி மாதம் பூரட்டாதி நட்சத்திரந்தன்று திருமூலநாயனாரது நாடகம் நடித்தல்; ஆரியச்கூத்து ஏழு அங்கம் ஆடுதல் இவைகளைப் பற்றி முன்னர்க் கூறப் பெற்றுள்ளது. அவைகளை அக்காலத்தே நடித்தவர் வடுகமாங்குடி பாண்டி குலாசனி ஆவர். அவர்க்குப்பின் அவைகளை நடித்தவர் சாக்கையர் குமரன் சிகண்டவன் ஆவர். அவைகளின் பொருட்டு சிகண்டனுக்குச் சாத்தனூர் சபையார் தங்கள் ஊரில் இருந்த அறச்சாலை அம்பலத்தில் கூட்டம் குறைவறக் கூடியிருந்து தென்கரை சாக்கைவேலி ஆனநில அளவுப்படி அரையே இரண்டுமாவும், திருஆவடுதுறை ஆழ்வார் தேவதானம் நெற்குப்பை பதிற்றுவேலியினும் கிழக்கடையமாம் பள்ளி வாய்க்காலுக்கு வடக்கு நிலம் முக்காலும் ஆக நிலம் ஒன்றே எழுமாவை நிர்த்தபோக அளித்திருந்தனர்.

**விக்கிரமபாண்டியன் சந்தி :**

விக்கிரமபாண்டியன் தான் பிறந்த அஸ்த நட்சத்திரத்தில் தன்பேரால் கட்டின விக்கிரம பாண்டியன் சந்திக்கு அமுது படி, சாத்துபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு உடலாக விருதராச பயங்கர வளநாட்டுக் கஞ்சனூர்ப்பற்றுத் தென்பால் திரைலோக்கியான விருதராச பயங்கரச் சதுர்வேதிமங்கலத்துக் குலோத்துங்கசோழன் பெருவழிக்கு உட்பட்ட திறப்பில் இருபது வேலியும், துறைசையார் அகரமான இராசேந்திர சோழச் சதுர்ப்பேதிமங்கலத்துப் பிடாகை கூத்தனூர் கொடியாலத்து விட்ட நிலம் பதிற்று வேலியும் வேணவரை நல்லூரில் நான்கு வேலியும் .........ராட்சதச்சதுப் பேதிமங்கலத்துப் பிடாகையூரிலும் அனபாய சதுர்ப் பேதிமங்கலத்துப் பிடாகை கண்டியூரிலும் நிலம் இருபத்தாறு வேலியும் ஆக நிலம் அறுபதிற்று வேலியைக் கொடுத்திருந்தான். மேற்குறித்த

இவைகளின்றித் திருவாவடுதுறை ஆழ்வார்க்கு சங்கராந்தி தோறும் முக்குறுணி நெல்லின் அரிசியால் அமுது செய்விப்பதற்கும் இரண்டு அயன சங்கராந்திக்கும் நூற்றெட்டு கலசத்தில் ஸ்நபனம் செய்விக்கவும் வடகரை தேவதானம் கார் நாட்டுத் தனிக்கடம்பூர் உடையான் கண்ணி புலியூர் நக்கர் அளித்த எண்கழஞ்சு பொன் கொண்டு மூன்றுமா நிலம் வாங்கி அளிக்கப் பெற்றிருந்தது. இதுபோலவே இன்னும் பல நிவந்தங்களாம்.

**வைத்தியத்திற்கு அளிக்கப் பெற்ற நிவந்தம் :**

உய்யக் கொண்டார் வளநாட்டு சோழேந்திரசிங்கமலத்து சவர்னன் அரையன் சங்கரனை உத்தமசோழ அசலரையனுக்கும் அவன் வம்சத்தார்க்கும் திருவாவடுதுறையில் வைத்தியஞ்செய்து கொண்டு உண்ணும் பொருட்டு ஆழ்வார் ஸ்ரீ பராந்தக ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார் இராஜேந்திர சிம்மவளநாட்டு இன்னம்பர் நாட்டுப் (தற்போது இன்னம்பூர் என வழங்கப்படுகிறது) பழைய வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலத்துச் சடையாரிடத்தில் நூற்று இருபது காசுகொடுத்து நிலம் எட்டு மாக்காணி முந்திரிகைக்கீழ் அரையும் குழி ஒன்றும் மனை இரண்டும் வாங்கி அளித்துள்ளனர். இந்நிகழ்ச்சி முதலாம் இராசேந்திர சோழனது நான்காம் ஆண்டில் நிகழ்ந்ததாகும்.

**திருவாவடுதுறையைத் தன்னகத்துக்கொண்ட வளநாடு**

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்ட வளநாடு உய்யக் கொண்டார் வளநாடாகும். இந்நாடு காவிரிக்கும் அரிசிலாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பை உடையது. இது ஆக்கூர்நாடு, அம்பர்நாடு, குறும்பூர்நாடு, மருகல்நாடு, பாம்பூர்நாடு, தென்கரைத் திரைமூர்நாடு, திருநறையூர் நாடு திருவழுந்தூர்நாடு, வெண்ணாடு, விளநாடு, பேராவூர்நாடு என்னும் பிரிவுகளை உடையதாய் இருந்தது.

**திருவாவடுதுறை தன்னகத்துக்கொண்ட நாடு :**

திரு ஆவடுதுறை உய்யக்கொண்டார் வளநாட்டின் பிரிவுகளில் ஒன்றாகிய தென்கரைத் திரைமூர் நாட்டிற்கு உட்பட்டதாகும். நெற்குப்பை, சாத்தனூர், நடார், நல்லுச்சேரி, திருக்குரங்காடுதுறை, மகேந்திரமங்கலம் என்னும் ஊர்கள் இந்நாட்டிற்கு உட்பட்ட சில ஊர்கள் எனக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

**பிற செய்திகள் :**

வடக்கு தேவகோஷ்டத்திலுள்ள அஷ்டபுஜ துர்க்கா பரமேஸ்வரியின் திருமேனிக்குக் கிழக்குப்பக்கமாக உள்ளதும், சில பகுதிகளை சுவரி

ல்வத்துக் கட்டப்பெற்றதும் ஆகிய கல்வெட்டில் கோப்பரகேசரி பன்மரான உடையார் காவேரிகரைகண்ட கரிகால சோழதேவர் என்று ஒரு சோழ அரசர் குறிக்கப்பெற்றுள்ளனர். இக் கல்வெட்டின் தொடக்கத்தில் 'தேவற்குயாண்டு நாலாவது தென்கரை திருவழுந்தூர் நாட்டு வாய்தலைப் படி குலையரையரோம் உடையார் திருவாவடுதுறை உடையார்க்கு நாங்கள் கைதிட்டு இட்டுக்கொடுத்தபரிசாவது" எனக் குறிக்கபெற்றுள்ளது. இதில் வாய்தலைப்படி குலையரையர்' ஒரு சபையினர் என்பது உறுதி. அவர்கள் எவ்வேலையைக் கண்காணித்துவந்தனர் என்பது புலப்படவில்லை.

இக்கோயிலிலுள்ள பொன் ஆபரணங்கள் குடிஞைக் கல்லாலும் வெண்கல உருக்கள் வெள்ளிக் கோலாலும், பித்தளை உருக்கள் மாண்டிஞலும் நிறுக்கப்பெற்று வந்தன. "வெள்ளிக் கோலால் நிறை தொளாயிரத்திருபத்தைம்பலநேகைசு (கஃசு)" என்னும் தொடர்களால் அக்காலத்தில் பலம்தான் உயர்ந்த நிறுத்தல் அளவை என்பதும் கஃசுதான் மிகச் சிறியது என்பதும் பெறப்படுகின்றன.

கோயில் காரியங்களின் பொருட்டு ஊர்ச்சபையார், திருவாவடுதுறை உடையார் கோயில் வடபக்கத்து உலகளந்தான் என்று பேர் கூறப்பட்ட மாடத்தில் கூட்டங் குறைவறக் கூடியிருந்தும் சங்கரதேவன் மண்டபத்தே கூட்டங் குறைவறக் கூடியிருந்தும் கவனித்து வந்தனர்.

சாத்தனூர்க்குச் சதுர்வேதிமங்கலம் என்று பெயர் வழங்கி வந்ததாக முதலாம் இராஜேந்திரசோழ தேவரின் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. இந்த ஸ்ரீசதுர்வேதி மங்கலத்துக்கு வடக்கில் சிற்றுனைச்சூர் என்னும் ஊர் இருந்தது.

(மேற்படி கல்வெட்டுச்செய்திகளை 1953 வருடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கல்வெட்டு அறிஞர் சுந்தரேச வாண்டையார் அவர்கள் இவ்வாதீனம் 21 வது பட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அருளாட்சிக் காலத்தில் திருமடத்திற்கு சமர்ப்பித்த கையெழுத்துப் பிரதிகளாக இவ் வாதீன சரஸ்வதிமகால் நூல்நிலையத்தில் அரிய கையெழுத்துப் பிரதிப்புலப் பிரிவில் பாதுகாக்கப்பட்டுள்ளன).

இவ்வாதீனத்து 22-வது பட்டம் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்களின் அருளாட்சிக் காலத்தில் 27—8—1972 அன்று இத் திருக்கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது.

உ

சிவமயம்

# திருவாவடுதுறை

# தேவாரத் திருப்பதிகங்கள்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

### 1. நாலடி மேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 1

வாழினும் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேன்அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே

இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 2

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே

இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 3

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடிஅலால் அரற்றாதுஎன் நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணைஒன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே

இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 4

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய்உன் அடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாஉன் அடியலால் அரற்றாதுஎன்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல்எழ விழித்தவனே
இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாதுஎன்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரிது ஆயவனே
இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறைஅரனே. 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாஉன் அடியலால் அரற்றுது என்னாப்
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே.
இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோஉனது இன்னருள் ஆவடு துறையரனே. 10

அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேற்படை எம்இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினைஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே. 11

*திருச்சிற்றம்பலம்*

## திருநாவுக்கரசு நாயனார்

### 2. திருநேரிசை

*திருச்சிற்றம்பலம்*

மாயிரு ஞாலம் எல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 1

மடந்தைபா கத்தர் போலும் மான்மறிக் கையர் போலும்
குடந்தையிற் குழகர் போலும் கொல்புலித் தோலர் போலும்
கடைந்தநஞ்சு உண்பர் போலும் காலனைக் காய்வர் போலும்
அடைந்தவர்க்கு அன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 2

உற்றநோய் தீர்ப்பர் போலும் உறுதுணை ஆவர் போலும்
செற்றவர் புரங்கள் மூன்றும் தீஎழச் செறுவர் போலும்
கற்றவர் பரவி ஏத்தக் கலந்துலந்து அலந்து பாடும்
அற்றவர்க்கு அன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 3

மழுவமர் கையர் போலும் மாதவள் பாகர் போலும்
எழுநுனை வேலர் போலும் என்புகொண்டு அணிவர் போலும்
தொழுதெழுந்து ஆடிப் பாடித் தோத்திரம் பலவும் சொல்லி
அழுமவர்க்கு அன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 4

பொடிஅணி மெய்யர் போலும் பொங்குவெண் நூலர் போலும்
கடியதோர் விடையர் போலும் காமனைக் காய்வர் போலும்
வெடிபடு தலையர் போலும் வேட்கையால் பரவும் தொண்டர்
அடிமையை அளப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 5

வக்கரன் உயிரை வவ்வக் கண்மலர் கொண்டு போற்றச்
சக்கரம் கொடுப்பர் போலும் தானவர் தலைவர் போலும்
துக்கமா மூடர் தம்மைத் துயரிலே வீழ்ப்பர் போலும்
அக்கரை ஆர்ப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 6

விடைதரு கொடியர் போலும் வெண்புரி நூலர் போலும்
படைதரு மழுவர் போலும் பாய்புலித் தோலர் போலும்
உடைதரு கீளர் போலும் உலகமும் ஆவர் போலும்
அடைபவர் இடர்கள் தீர்க்கும் ஆவடு துறைய னாரே. 7

முந்திவா னோர்கள் வந்து முறைமையால் வணங்கி ஏத்த
நந்திமா காளர் என்பார் நடுவுடை யார்கள் நிற்பச்
சிந்தியா தேயொ ழிந்தார் திரிபுரம் எரிப்பர் போலும்
அந்திவான் மதியம் சூடும் ஆவடு துறைய னாரே. 8

பானமர் ஏனம்ஆகிப் பார்இடந் திட்ட மாலும்
தேனமர்ந்து ஏறும் அல்லித் திசைமுகம் உடைய கோவும்
தீனரைத் தியக்க றுத்த திருஉரு உடையர் போலும்
ஆன்நரை ஏற்றர் போலும் ஆவடு துறைய னாரே. 9

பார்த்தனுக்கு அருள்வர் போலும் படர்சடை முடியர் போலும்
ஏத்துவார் இடர்கள் தீர இன்பங்கள் கொடுப்பர் போலும்
கூத்தராய்ப் பாடி ஆடிக் கொடுவலி அரக்கன் தன்னை
ஆர்த்தவாய் அலறு விப்பார் ஆவடு துறைய னாரே. 10

திருச்சிற்றம்பலம்

## 3. திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மஞ்சனே மணியும் ஆனாய் மரகதத் திரளும் ஆனாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வி னானே
துஞ்சும்போது ஆக வந்து துணையெனக்கு ஆகி நின்று
அஞ்சல்என்று அருள வேண்டும் ஆவடு துறையு ளானே. 1

நான்உகந்து உன்னை நாளும் நணுகுமா கருதி யேயும்
ஊன்உகந்து ஓம்பு நாயேன் உள்ளுற ஐவர் நின்றார்
தான்உகந் தேயு கந்த தகவிலாத் தொண்ட னேன்நான்
ஆன்உகந்து ஏறு வானே ஆவடு துறையு ளானே. 2

கட்டமே வினைக ளான காத்திவை நோக்கி ஆளாய்
ஒட்டவே ஒட்டி நாளும் உன்னைஉள் வைக்க மாட்டேன்
பட்டவான் தலைகை ஏந்திப் பலிதிரிந்து ஊர்கள் தோறும்
அட்டமா உருவி னானே ஆவடு துறையு ளானே. 3

பெருமைநன்று உடைய தில்லை என்றுநான் பேச மாட்டேன்
ஒருமையால் உன்னை உள்கி உகந்துவான் ஏற மாட்டேன்
கருமையிட் டாய ஊனைக் கட்டமே கழிக்கின் றேன்நான்
அருமையாம் நஞ்சம் உண்ட ஆவடு துறையு ளானே. 4

துட்டனாய் வினைய தென்னும் சுழித்தலை அகப்பட் டேனைக்
கட்டனாய் ஐவர் வந்து கலக்காமைக் காத்துக் கொள்வாய்
மட்டவிழ் கோதை தன்னை மகிழ்ந்துஒரு பாகம் வைத்து
அட்டமா நாகம் ஆட்டும் ஆவடு துறையு ளானே. 5

காரழல் கண்ட மேயாய் கடிமலர் புரங்கள் மூன்றும்
ஓரழல் அம்பி னாலே உகைத்துத்தீ எரிய மூட்டி
நீரழற் சடையு ளானே நினைப்பவர் வினைகள் தீர்ப்பாய்
ஆரழல் ஏந்தி ஆடும் ஆவடு துறையு ளானே. 6

செறிவிலேன் சிந்தை யுள்ளே சிவன்அடி தெரிய மாட்டேன்
குறியிலேன் குணம்ஒன்று இல்லேன் கூறுமா கூற மாட்டேன்
நெறிபடு மதியொன்று இல்லேன் நினையுமா நினைய மாட்டேன்
அறிவிலேன் அயர்த்துப் போனேன் ஆவடு துறையு ளானே. 7

கோலமா மங்கை தன்னைக் கொண்டொரு கோலம் ஆய
சீலமே அறிய மாட்டேன் செய்வினை மூடி நின்று
ஞாலமாம் இதனுள் என்னை நைவியா வண்ணம் நல்காய்
ஆலமா நஞ்சம் உண்ட ஆவடு துறையு ளானே. 8

நெடியவன் மலரி னானும் நேர்ந்துஇரு பாலும் நேடக்
கடியதோர் உருவம் ஆகிக் கனல்எரி யாகி நின்ற
வடிவினை வண்ணம் என்றே என்றுதாம் பேச லாகார்
அடியனேன் நெஞ்சின் உள்ளார் ஆவடு துறையு ளானே 9

மலைக்குநே ராய ரக்கன் சென்றுற மங்கை அஞ்சத்
தலைக்குமேல் கைக ளாலே தாங்கினான் வலியை மாள
உலப்பிலா விரலால் ஊன்றி ஒறுத்துஅவற்கு அருள்கள் செய்து
அலைத்தவான் கங்கை சூடும் ஆவடு துறையு ளானே. 10

*திருச்சிற்றம்பலம்*

## 4. திருக்குறுந்தொகை

*திருச்சிற்றம்பலம்*

நிறைக்க வாலியள் அல்லள்இந் நேரிழை
மறைக்க வாலியள் அல்லள்இம் மாதரான்
பிறைக்க வாலப் பெரும்புனல் ஆவடு
துறைக்க வாலியோடு ஆடிய சுண்ணமே. 1

தவள மாமதிச் சாயலோர் சந்திரன்
பிளவு சூடிய பிஞ்ஞகன் எம்இறை
அளவு கண்டிலள் ஆவடு தண்டுறைக்
களவு கண்டனள் ஒத்தனள் கன்னியே 2

பாதிப் பெண்ஒரு பாகத்தன் பன்மறை
ஓதி என்னுளம் கொண்டவன் ஒண்பொருள்
ஆதி ஆவடு தண்டுறை மேவிய
சோதி யேசுட ரேஎன்று சொல்லுமே. 3

கார்க்கொள் மாமுகில் போல்வதோர் கண்டத்தன்
வார்க்கொள் மென்முலை சேர்ந்துஇறு மாந்துஇவள்
ஆர்க்கொள் கொன்றையன் ஆவடு தண்டுறைத்
தார்க்கு நின்றுஇவள் தாழுமா காண்மினே. 4

கருகு கண்டத்தன் காய்கதிர்ச் சோதியன்
பருகு பாலமு தேஎனும் பண்பினன்
அருகு சென்றிலள் ஆவடு தண்டுறை
ஒருவன் என்னை உடையகோ என்னுமே. 5

குழலும் கொன்றையும் கூவிள மத்தமும்
தழலும் தையலோர் பாகமாத் தாங்கினான்
அழகன் ஆவடு தண்டுறை யானைக்
கழலும் கைவளை காரிகை யாளுக்கே. 6

பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத்
தஞ்ச மென்றிறு மாந்திவள் யாரையும்
அஞ்சுவாள் அல்லள் ஆவடு தண்டுறை
மஞ்சனோடுஇவள் ஆடிய மையலே. 7

பிறையும் சூடிநல் பெண்ணோடு ஆணாகிய
நிறையும் நெஞ்சமும் நீர்மையுங் கொண்டவன்
அறையும் பூம்பொழில் ஆவடு தண்டுறை
இறைவன் என்னை உடையவன் என்னுமே. 8

வையந் தான்அளந் தானும் அயனுமாய்
மெய்யைக் காணலுற் றார்க்குஅழல் ஆயினான்
ஐயன் ஆவடு தண்டுறை யானைக்
கையில் வெள்வளை யும்கழல் கின்றதே. 9

பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான்
மிக்க வாளரக் கன்வலி வீட்டினான்
அக்கும் அணிந்தவன் ஆவடு தண்டுறை
நக்கன் என்னும்இந் நாணிலி காண்மினே. 10

திருச்சிற்றம்பலம்

## 5. திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

நம்பனை நால்வேதம் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லால் இருந்தான் தன்னைக்
கற்பகமாய் அடியார்கட்கு அருள்செய் வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 1

மின்னானை மின்னிடைச்சேர் உருமி னானை
வெண்முகிலாய் எழுந்துமழை பொழிவான் தன்னைத்
தன்னானைத் தன்னொப்பார் இல்லா தானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி
என்னானை எந்தை பெருமான் தன்னை
இருநிலமும் அண்டமுமாய்ச் செக்கர் வானே
அன்னானை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே . 2

பத்தர்கள் சித்தத்தே பாவித் தானைப்
பவளக் கொழுந்தினை மாணிக் கத்தின்
தொத்தினைத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சொல்லுவார் சொற்பொருளின் தோற்றம் ஆகி
வித்தினை முளைக்கிளையை வேரைச் சீரை
வினைவயத்தின் தன்சார்பை வெய்ய தீர்க்கும்
அத்தனை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 3

பேணியநல் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை இடர்க்கடலுள் சுழிக்கப் பட்டுஇங்கு
இளைக்கின்றேற்கு அக்கரைக்கே ஏற வாங்கும்
தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைத் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 4

ஒருமணியை உலகுக்குஓர் உறுதி தன்னை
உதயத்தின் உச்சியை உருமா னானைப்
பருமணியைப் பாலோடுஅஞ்சு ஆடி னானைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
தீங்கரும்பின் இன்சுவையைத் திகழும் சோதி
அருமணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 5

ஏற்றானை எண்தோள் உடையான் தன்னை
எல்லில் நடமாட வல்லான் தன்னைக்
கூற்றானைக் கூற்றம் உதைத்தான் தன்னைக்
குரைகடல்வாய் நஞ்சுண்ட கண்டன் தன்னை
நீற்றானை நீளரவொன் று ஆர்த்தான் தன்னை
நீண்ட சடைமுடிமேல் நீரார் கங்கை
ஆற்றானை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 6

கைம்மான மதகளிற்றை உரித்தான் தன்னைக்
கடல்வரைவான் ஆகாசம் ஆனான் தன்னைச்
செம்மானப் பவளத்தைத் திகழும் முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயா னானை
எம்மானை என்மனமே கோயி லாக
இருந்தானை என்புருகும் அடியார் தங்கள்
அம்மானை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 7

மெய்யானைப் பொய்யரொடு விரவா தானை
வெள்ளடையைத் தண்ணிழலை வெந்தீ ஏந்தும்
கையானைக் காமன்உடல் வேவக் காய்ந்த
கண்ணானைக் கண்மூன் று உடையான் தன்னைப்
பையா டரவம்மதி யுடனே வைத்த
சடையானைப் பாய்புலித்தோல் உடையான் தன்னை
ஐயானை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 8

வேண்டாமை வேண்டுவதும் இல்லான் தன்னை
விசயனைமுன் அசைவித்த வேடன் தன்னைத்
தூண்டாமைச் சுடர்விடுநல் சோதி தன்னைச்
சூலப் படையானைக் காலன் வாழ்நாள்
மாண்டோட உதைசெய்த மைந்தன் தன்னை
மண்ணவரும் விண்ணவரும் வணங்கி யேத்தும்
ஆண்டானை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 9

பந்தணவு மெல்விரலாள் பாகன் தன்னைப்
பாடலோடு ஆடல் பயின்றான் தன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் தன்னைச்
செந்தமிழோடு ஆரியனைச் சீரி யானைத்
திருமார்பில் புரிவெண்ணூல் திகழப் பூண்ட
அந்தணனை ஆவடுதண் டுறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 10

தரித்தானைத் தண்கடல்நஞ்சு உண்டான் தன்னைத்
தக்கன்றன் பெருவேள்வி தகர்த்தான் தன்னைப்
பிரித்தானைப் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பெருவலியால் மலையெடுத்த அரக்கன் தன்னை
நெரித்தானை நேரிழையாள் பாகத் தானை
நீசனேன் உடல்உறுநோ யான தீர
அரித்தானை ஆவடுதண் டுறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. 11

*திருச்சிற்றம்பலம்*

## 6. திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் உறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 1

முற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவில்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணு நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
மேற்றான் நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே இடங்கொடுத்து நாளும் நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சேல் என்னுய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 2

வரையார் மடமங்கை பங்கா கங்கை மணவாளா
வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா உயிர்போகப் பெறுவே னாகில்
உறுநோய்வந் தெத்தனையும் உற்றால் என்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக்
காதலித்து நின்கழலே ஏத்தும் அன்பர்க்கு
அரையா அடியேனை அஞ்சேல் என்னுய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 3

சிலைத்தார் திரிபுரங்கள் தீயில் வேவச்
சிலைவளைவித்து உமையவளை அஞ்ச நோக்கிக்
கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத் தோடும்
களிறுரித்த கங்காளா எங்கள் கோவே
நிலைத்தார் அவர்தமக்கே பொறையாய் நாளும்
நில்லா உயிரோம்பும் நீதனேன் நான்
அலுத்தேன் அடியேனை அஞ்சேல் என்னுய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 4

நறுமா மலர்கொய்து நீரில் மூழ்கி
நாடோறும் நின்கழலே ஏத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்றால் என்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒலிதிரைநீர்க் கடல்நஞ்சுண் டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சேல் என்னுய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 5

கோன்நா ரணன் அங்கம் தோள்மேற் கொண்டு
கொழுமலரான் தன்சிரத்தைக் கையில் ஏந்திக்
கானூர் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கங்காள வேடராய் எங்கும் செல்வீர்
நானூர் உமக்கோர் வினைக்கே டனேன்
நல்வினையும் தீவினையும் எல்லாம் முன்னே
ஆனாய் அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 6

உழைஉரித்த மானுரிதோல் ஆடை யானே
உமையவள்தம் பெருமானே இமையோர் ஏறே
கழையிறுத்த கருங்கடல்நஞ் சுண்ட கண்டா
கயிலாய மலையானே உன்பால் அன்பர்
பிழைபொறுத்தி என்பதுவும் பெரியோய் நின்றன்
கடனன்றே பேரருளுன் பால தன்றே
அழையுறுத்து மாமயில்கள் ஆலும் சோலை
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 7

உலந்தார் தலைகலனென் றேந்தி வானோர்
உலகம் பலதிரிவாய் உன்பால் அன்பு
கலந்தார் மனங்கவரும் காத லானே
கனலாடும் கையவனே ஐயா மெய்யே
மலந்தாங் குயிர்ப்பிறவி மாயக் காய
மயக்குளே விழுந்தழுந்தி நாளு நாளும்
அலந்தேன் அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 8

பல்லார்ந்த வெண்டலை கையி லேந்திப்
பசுவேறி ஊரூரன் பலிகொள் வானே
கல்லார்ந்த மலைமகளும் நீயும் எல்லாம்
கரிகாட்டில் ஆட்டுகந்தீர் கருதீ ராகில்
எல்லாரும் என்றன்னை இகழ்வர் போலும்
ஏழை அமண் குண்டர்சாக் கியர்க ளொன்றுக்
கல்லாதார் திறத்தொழிந்தேன் அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 9

துறந்தார்தம் தூநெறிக்கண் சென்றே னல்லேன்
துணைமாலை சூட்டநான் தூயேன் அல்லேன்
பிறந்தேன்நின் திருவருளே பேசின் அல்லால்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே
செறிந்தார் மதில் இலங்கைக் கோமான் தன்னைச்
செறுவரைக்கீழ் அடர்த்தருளிச் செய்கை எல்லாம்
அறிந்தேன் அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே. 10

*திருச்சிற்றம்பலம்*

## சுந்தரமூர்த்தி நாயனார்

### 7. பண் - தக்கேசி

*திருச்சிற்றம்பலம்*

மறைய வன்ஒரு மாணிவந் தடைய
வார மாய்அவன் ஆருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலால்
கடந்த காரணம் கண்டுகண்டு அடியேன்
இறைவன் எம்பெரு மானென்றெப் போதும்
ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக்கு அன்பொடு அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதியெம் மானே.

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்அது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண்டு அடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றியென்று அன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக்கு அஞ்சிவந்து அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதியெம் மானே. 2

திகழு மாலவன் ஆயிர மலரால்
ஏத்து வானொரு நீண்மலர் குறையப்
புகழி னாலவன் கண்ணிடந் திடலும்
புரிந்து சக்கரம் கொடுத்தல்கண்டு அடியேன்

திகழும் நின்திருப் பாதங்கள் பரவித்
தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக்கு அஞ்சிவந்து அடைந்தேன்
ஆவ டுதுறை யாதி யெம் மானே. 3

வீரத் தால்ஒரு வேடுவன் ஆகி
விசைத்துஓர் கேழலைத் துரந்துசென்று அணைந்து
போரைத் தான்விச யன்தனக் கன்பாய்ப்
புரிந்து வான்படை கொடுத்தல்கண்டு அடியேன்
வாரத் தால்உன நாமங்கள் பரவி
வழிபட் டுன்திற மேநினைந் துருகி
ஆர்வத் தோடும்வந்து அடியிணை அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதியெம் மானே. 4

ஒக்க முப்புரம் ஓங்குஎரி தூவ
உன்னை உன்னிய மூவர்நின் சரணம்
புக்கு மற்றவர் பொன்னுலகு ஆளப்
புகழி னல்அருள் ஈந்தமை அறிந்து
மிக்க நின்கழ லேதொழுது அரற்றி
வேதியா ஆதி மூர்த்திநின் அரையில்
அக்க ணிந்தஎம் மான்உனை அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதியெம் மானே. 5

இந்தப் பதிகத்தில் 6, 7, 8, 9, 10 செய்யுள்கள் மறைந்துபோயின.

*திருச்சிற்றம்பலம்*

## 8. பண் - தக்கேசி

*திருச்சிற்றம்பலம்*

கங்கை வார்சடை யாய்கண நாதா
காலகாலனே காமனுக்கு அனலே
பொங்கு மாகடல் விடமிடற் றானே
பூதநாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே
தீர்த்தனேதிரு வாவடுதுறையுள்
அங்கணா எனை அஞ்சல்என் றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே. 1

மண்ணின் மேல்மயங் கிக்கிடப்பேனை
வலியவந்தெனை ஆண்டுகொண்டானே
கண்ணிலேனுடம் பில்லடுநோயால்
கருத்தழிந்துனக் கேபொறையானேன்
தெண்ணிலா எறிக் குஞ்சடையானே
தேவனே திரு வாவடுதுறையுள்
அண்ணலே எனை அஞ்சலென்றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே. 2

ஒப்பிலாமுலை யாளொருபாகா
உத்தமாமத்தம் ஆர்தருசடையாய்
முப்புரங்களைத் தீவளைத்தங்கே
மூவருக்கருள் செய்யவல்லானே
செப்ப ஆல்நிழற் கீழிருந்தருளும்
செல்வனே திரு வாவடுதுறையுள்
அப்பனே எனை அஞ்சலென்றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே. 3

கொதியினால்வரு காளிதன் கோபம்
குறைய ஆடிய கூத்துடையானே
மதியிலேனுடம் பில்லடுநோயால்
மயங்கினேன்மணி யேமணவாளா
விதியினாலிமை யோர்தொழுதேத்தும்
விகிர்தனே திரு வாவடுதுறையுள்
அதிபனே எனை அஞ்சலென் றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே. 4

வந்தவாளரக் கன்வலிதொலைத்து
வாழும்நாள்கொடுத் தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிப் பூசவல்லானே
வேடனாய்விச யற்கருள்புரிந்த
இந்துசேகர னேஇமை யோர்சீர்
ஈசனே திரு வாவடுதுறையுள்
அந்தணா எனை அஞ்சலென்றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே 5

குறைவிலாநிறை வேகுணக்குன்றே
கூத்தனேகுழைக் காதுடையானே
உறவிலேனுனை யன்றிமற்றடியேன்
ஒருபிழைபொறுத் தாலிழிவுண்டே
சிறைவண் டார்பொழில் சூழ்திருவாரூர்ச்
செம்பொனேதிரு வாவடுதுறையுள்
அறவனேஎனை அஞ்சலென் றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே. 6

வெய்யமாகரி யீருரியானே
வேங்கையாடையி னாய்விதிமுதலே
மெய்யனேயடல் ஆழியன் றுஅரிதான்
வேண்டநீகொடுத் தருள்புரிவிகிர்தா
செய்யமேனிய னேதிகழொளியே
செங்கணாதிரு வாவடுதுறையுள்
ஐயனேஎனை அஞ்சலென் றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே. 7

கோதிலாவமுதே அருள்பெருகு
கோலமேஇமை யோர்தொழுகோவே
பாதிமாதொரு கூறுடையானே
பசுபதீபர மாபரமேட்டீ
தீதிலாமலை யேதிருவருள்சேர்
சேவகாதிரு வாவடுதுறையுள்
ஆதியேஎனை ஆஞ்சலென் றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே 8

வானநாடனே வழித்துணைமருந்தே
மாசிலாமணி யேமறைப்பொருளே
ஏனமாஎயிறு ஆமையும்எலும்பும்
ஈடுதாங்கிய மார்புடையானே
தேன்நெய்பால்தயிர் ஆட்டுகந்தானே
தேவனேதிரு வாவடுதுறையுள்
ஆனையேஎனை அஞ்சலென் றருளாய்
ஆரெனக்குறவு அமரர்கள்ஏறே

வெண்டலைப்பிறை கொன்றையும் அரவும்
வேரிமத்தமும் விரவிமுன்முடித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடையானை
ஈசனைத்திரு வாவடுதுறையுள்
அண்டவாணனைச் சிங்கடியப்பன்
அணுக்கவன்றொண்டன் ஆர்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர் பத்தும்வல்லார்கள்
சாதலும்பிறப் பும்அறுப்பாரே. 0

திருச்சிற்றம்பலம்

## சேந்தனார் திருவிசைப்பா

## திருவாவடுதுறை

பண் : பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை
அமுதேயென் றுன்னை அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன்று
அருளா தொழிவது மாதிமையே. 1

மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி அமரர் புராணனும்
அணிஆ வடுதுறை நம்பிநின்ற
நீதி அறிகிலள் பொன்னெடுந்
திண்தோள் புணர நினைக்குமே. 2

நினைக்கும் நிரந்தர னேயென்னும்
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுதல் நச்சுமீர்

மனக்கின்ப வெள்ள மலைமகள்
மணவாளா நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே 3

தருணேந்து சேகர னேயெனுந்
தடம்பொன்னித் தென்கரைச் சாக்கையூர்ப்
பொருணேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வ மல்குபொற் கோயிலுள்
அருணேர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே
தெருணேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே. 4

திலக நுதல்உமை நங்கைக்கும்
திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அதொன் றறிகின்றி லேமெனும்
அணியும்வெண் ணீறஞ் செழுத்தலால்
வல்தொன் றில்ஸ் இதற் கென்செய்கேன்
வயல்அந்தண் சாந்தையர் வேந்தனே. 5

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப்புர வித்தேர்ச்
சாந்தை முதல்அயன் சாரதி
கதிஅருள் என்னுமித் தையலை
ஆந்தண் திருவா வடுதுறை
யான்செய்கை யார்அறி கிற்பாரே. 6

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்கு
எடுத்தோடிக் கெட்டஅத் தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்
என்சொல்லிச் சொல்லும்இத் ... மொழி

கற்போல் மனங்கனி வித்தளம்
கருணையா வந்திடாய் என்றால்
பெற்போ பெருந்திரு வாவடு
துறையாளி பேசாது ஒழிவதே.

ஒழிவொன்று இலா உண்மை வண்ணமும்
உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
மொழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர்
அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை யெய்திநின்று
இறுமாக்கும் என் இள மானளே. 8

மானேர் கலைவளை யுங்கவர்ந்து
உளங்கொள்ளை கொள்ள வழக்குண்டே
தேனே அமுதேஎன் சித்தமே
சிவலோக நாயகச் செல்வமே
ஆனேஅ லம்பு புனற்பொன்னி
அணிஆ வடுதுறை அன்பர்தம்
கோனேநின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே. 9

குன்றேந்தி கோகன கத்தயன்
அறியா நெறியென்னைக் கூட்டினாய்
என்றேங்கி ஏங்கி அழைக்கின்றாள்
இளவல்லி எல்லைக டந்தனள்
அன்றே அலம்பு புனற்பொன்னி
அணி ஆ வடுதுறை யாடினாள்
நன்றே இவள்நம் பரமல்லள்
---லோக நாயகன் பாலளே. 10

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காம புராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்கும்நீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ(டு)
ஆலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே. 11

*திருச்சிற்றம்பலம்*

# தலத்தொடர்புடைய பெரியபுராணப் பாடல்கள்

... .... ... ...

நம்ம லத்துயர் தீர்க்கவந்து அருளிய ஞானச்
செம்ம லார்திரு ஆவடு துறையினைச் சேர்ந்தார். ... 417

மூவ ருக்குஅறி வரும்பொருள் ஆகிய மூலத்
தேவர் தம்திரு ஆவடு துறைத்திருத் தொண்டர்
பூஅ லம்புதண் பொருபுனல் தடம்பணைப் புகலிக்
காவ லர்க்குஎதிர் கொள்ளும் ஆதரவுடன் கலந்தார். ... 418

வந்து அணைந்தவர் தொழாமுனம் மலர்புகழ்ச் சண்பை
அந்த ணர்க்கெலாம் அருமறைப் பொருள்என வந்தார்
சந்த நித்திலச் சிவிகைநின்று இழிந்துஎதிர் தாழ்ந்தே
சிந்தை இன்புற இறைவர்தம் கோயில்முன் சென்றார். ... 419

நீடு கோபுரம் இறைஞ்சிஉள் புகுந்துநீள் நிலையான்
மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
ஆடும் ஆதியை ஆவடு துறையுள்ஆர் அமுதை
நாடு காதலில் பணிந்துஎழுந்து அருந்தமிழ் நவின்றார். ... 420

அன்பு நீடிய அருவிசண் பொழியும்ஆர் வத்தால்
முன்பு போற்றியே புறப்புஅணை முத்தமிழ் விரகர்
துன்பு போம்மனத் திருத்தொண்டர் தம்முடன் தொழுதே
இன்பம் மேவிஅப் பதியினில் இனிதுஅமர்ந்து இருந்தார். ... 421

மேவி அங்குஉறை நாளினில் வேள்விசெய் வதனுக்கு
ஆவ தாகிய காலம்வந்து அணைவுற அணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவ தற்குஅரும் பொருள்பெற எதிர்நின்று புகன்றார். ... 422

தந்தை யார்மொழி கேட்டலும் புகலியார் தலைவர்
முந்தை நாளிலே மொழிந்தமை நினைத்துஅருள் முன்னி
"அந்தம் இல்பொருள் ஆவன ஆவடு துறையுள்
எந்தை யார்அடித் தலங்களன் றோ" என எழுந்தார். ... 423

சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயில்முன்பு எய்தி
நின்று போற்றுவார் "நீள்நிதி வேண்டினார்க்கு ஈவது
ஒன்றும் மற்றுஇலேன் உன்அடி அல்லதுஒன்று அறியேன்"
என்று பேர்அருள் வினவிய செந்தமிழ் எடுத்தார். ... 424

எடுத்த வண்தமிழ்ப் பதிகநா லடியின்மேல் இருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்தஇன் இசையினால் துதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலார் அடியிணை வழுத்தி
அடுத்த சிந்தையால் ஆதரித்து அஞ்சலி அளித்தார். .... 425

நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந்து அருளிய இறைவர்இன் அருளால்
அச்சி றப்புஅருள் பூதமுன் விரைந்துஅகல் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன்ஆ யிரச்கிழி ஒன்று. ... 426

வைத்த பூதம்அங்கு அணைந்துமுன் நின்றுநல் வாக்கால்
"உய்த்த இக்கிழி பொன்உல வாக்கிழி உமக்கு
நித்த னார்அருள் செய்தது" என்று உரைக்கநேர் தொழுதே
அத்த னார்திரு வருள்நினைந்து அவனிமேற் பணிந்தார். ... 427

பணிந்து எழுந்துகை தொழுதுமுன் பனிமலர்ப் பீடத்து
அணைந்த ஆடகக் கிழிதலை கொண்டுஅரு மறைகள்
துணிந்த வான்பொருள் தரும்பொருள் தூயவாய் மையினால்
தணிந்த சிந்தைஅத் தந்தையார்க்கு அளித்துஉரை செய்வார். ... 428

"ஆதி மாமறை விதியினால் ஆறுசூழ் வேணி
நாத னாரைமுன் னாகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவும் திருக்கழு மலத்து
வேத வேதியர் அனைவருஞ் செய்பவும் மிகுமால்." ... 429

என்று கூறிஅங்கு அவர்தமை விடுத்தபின் அவரும்
நன்றும் இன்புறு மனத்தொடும் புகலிமேல் நண்ண
வென்றி ஞானசம் பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்றல் ஆவடு துறையினில் மகிழ்ந்துஇனிது இருந்தார். .. 430

அன்ன லார்திரு ஆவடு துறைஅமர்ந் தாரை
உள்நி லாவிய காதலி னால்பணிந்து உறைந்து
மன்னெ னிம்உய வந்தவர் போர்ந்துவார் சடைமேல்
தென்னி லாஅணி வார்திருக் கோழம்பஞ் சேர்ந்தார் .... 431

"ஆஉறும்அஞ்சு ஆடுவார் கோடி காவில் அணைந்துபணிந்துஆவடு தண்டுறையைச் சார்ந்தார். 190

"ஆவடுதண் டுறையாரை அடைந்துய்ந்தேன்" என்று அளவில்திருத் தாண்டகமுன் அருளிச் செய்து, மேவுதிருக் குறுந்தொகை நேரிசையுஞ் சந்த விருத்தங்கள் ஆனவையும் வேறு வேறு, பாஅலர் செந்தமிழ்த் தொடையால் பள்ளித் தாமம் பலசாத்தி மிக்கெழுந்த பரிவினோடும், பூவலயத் தவர்பரவப் பலநாள் தங்கிப் புரிவுறுகைத் திருத்தொண்டு போற்றிச் செய்வார். ... 191

*திருநாவு— புராணம்,*

உரவுநீர்த் தடம்பொன்னி அடைந்துஅன்பருடன்ஆடி
அரவுஅணிந்தார் அமர்ந்ததிரு வாவடுதண் டுறைஅணைந்தார் ...295

அங்குஅணைவார் தமைஅடியார் எதிர்கொள்ளப் புக்கருளிப்
பொங்குதிருக் கோயிலினைப் புடைவலம்கொண்டு உள்அணைந்து
"கங்கைவாழ் சடையாய்ஓர் கண்ணிலேன்" எனக்கவல்வார்
"இங்குஎனக்குஆர் உறவு"என்னும் திருப்பதிகம் எடுத்துஇசைத்தார்

*ஏயர்கோ — புராணம்.*

ஆவடுதண் டுறைஅணைந்துஅங்கு அரும்பெருமை உறவணங்கி
மேவுவார் புறக்குடபால் மிக்குஉயர்ந்த அரசின்கீழ்த்
தேஇருக்கை அமர்ந்துஅருளிச் சிவயோகம் தலைநின்று
பூஅலரும் இதயத்துப் பொருளோடும் உணர்ந்திருந்தார். ... 25

ஊன்உடம்பிற் பிறவிவிடம் தீர்ந்துஉலகத் தோர்உய்ய
ஞானம்முதல் நான்கும்மலர் நல்திருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக்கு ஒன்றாகப் பரம்பொருளாம்
ஏனஎயிறு அணிந்தாரை "ஒன்றவன்தான்" என எடுத்து. ... 26

முன்னியஅப் பொருள்மாலைத் தமிழ்மூவா யிரம்சாத்தி
மன்னியமூ வயிரத்தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை
தன்னில் அணைந்து ஒருகாலும் பிரியாமைத் தாள் அடைந்தார்.

*திருமூல — புராணம்*

*திருச்சிற்றம்பலம்*

# அருணகிரிநாதர் திருப்புகழ்

தத்த தன தான தனத்தனத் தத்த தத்த
தத்த தன தான தனத்தனத் தத்த தத்த
தத்த தன தான தனத்தனத் தத்த தத்த தனதான

சொற்பிழைவ ராமல் உனைக்கனக் கத்துதித்து
நிற்பதுவ ராத பவக்கடத் திற்சு ழற்றி
சுக்கிலவ தார வழிக்கிணக் கிக்க ளித்து விலைமாதர்

துப்பிறைய தான இதழ்க்கனிக் குச்சு ருத்தை
வைத்துமய லாகி மனத்தைவிட் டுக்க டுத்த
துர்ச்சனம காத கரைப்புவிக் குட்ட மைத்த நிதிமேவு

கற்பக இராச னெனப்படைக் குப்பெ ருத்த
அர்ச்சுனந ராதி யெனக்கவிக் குட்பதித்து
கற்றறிவி னைவ யெடுத்தடுத் துப்படித்து மிகையாகக்

கத்திடுமெ யாக வலிக்கவிப் பைத்தொ லைத்து
கைப்பொருளி லாமை யெனைக்கலக் கப்படுத்து
கற்பனைவி டாமல் அலைத்திருக் கச்சலிக்க விடலாமோ

எற்பணிய ராவை மிதித்துவெட் டித்துவைத்து
பற்றியக ராவை யிழுத்துரக் கக்கிழித்து
எட்கரிப டாமல் இதத்தபுத் திக்கதிக்கு நிலையோதி

எத்தியப சாசின் முலைக்குடத் தைக்குடித்து
முற்றுயிரி லாமல் அடக்கிவிட் டுச்சிரித்த
இற்கணையி ராமர் சுகித்திருக் கச்சினத்த திறல்வீரா

வெற்பெனம தாணி நிறுத்துருக் கிச்சமைத்து
வர்க்கமணி யாக வடித்திருத் தித்தகட்டின்
மெய்க்குலம தாக மலைக்கமுத் தைப்பதித்து வெகுகோடி

விட்கதிர தாக நிகர்த்தொளிக் கச்சிவந்த
ரத்தினப டாக பயிற்பரிக் குத்தரித்து
மிக்கதிரு வாவ டுதுற்றுறைக் குட்செழித்த பெருமாளே.

*தான தானன தானன தத்தன*
*தான தானன தானன தத்தன*
*தான தானன தானன தத்தன* *தனதான*

சோதி மாமதி போல்முக மூங்கிளர்
மேரு லாவிய மாமுலை யுங்கொடு
தூர வேவரும் ஆடவர் தங்கள்முன் எதிராயே

சோலி பேசிமுன் ஞளிலி ணங்கிய
மாதர் போலிரு தோளில்வி ழுந்தொரு
சூதி னல்வர வேமனை கொண்டவ ரேர்ஒமேவி

மோதி யேகனி வாயத ரந்தரு
நாளி லேபொருள் சூறைகள் கொண்டுபின்
மோன மாயவ மேசில சண்டைக ளூடனேகி

மோச மேதரு தோதக வம்பியர்
மீதி லேமய லாகிம னந்தளர்
மோட னாகிய பாதக னுங்கதி பெறுவேனோ

ஆதி யேயெனும் வானவர் தம்பகை
யான சூரனை மோதிய ரும்பொடி
யாக வேமயி லேறிமு னிந்திடு நெடுவேலா

ஆயர் வாழ்பதி தோறுமு கந்துர
லேறி யேயுறி மீதனை யுங்களா
வாக வேகொடு போதநு கர்ந்தவன் மருகோனே

வாதி னல்வரு காளியை வென்றிடு
மாதி நாயகர் வீறுத யங்குகை
வாரி ராசனு மேபணி யுந்திரு நடமாதர்

வாச மாமல ரானொடு செந்திரு
மார்பில் வீறிய மாயவ னும்பணி
மாசி லாமணி ஈசர்ம கிழ்ந்தருள் பெருமானே.

*திருச்சிற்றம்பலம்*

உ

சிவமயம்

# க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

தேவாதி தேவன்சொல் வேதாக மங்களைத்
திருமந்த்ர மாலையென்றே
திகழ்சமா தியிலிருந் துலகத்துள் அருள்விழி
திறந்தாண் டினுக்கொன்றெனும்

பாவாக வேசொன்ன பரமசிவ னானகுரு
பணியோக அட்டாங்கமும்
பகர்வரிய சித்தியும் திரிகால ஞானமும்
பரிபக்கு வர்க்கருளுவோன்

சேவேறும் ஒருவனே பரமதத் துவமெனும்
திருமூல நாதன்மகிழூர்
திருவிசைப் பாவென்னும் அதிமதுர கவிபாடு
திருமாளி கைத்தேவர்வாழ்

காவேரி சூழ்ந்ததிரு வாவடுது றைக்குமர !
கனிவாயின் முத்தமருளே
கங்கா நதிச்சரவ ணத்துவளர் காங்கேய !
கனிவாயின் முத்தமருளே.

— சிதம்பரநாதமுனிவர்.

உ

சிவமயம்

# துறைசைப்புராணம்

## வாழ்த்து

கார்முகில்போற் கொடைபுரிகை வள்ளல் ஆகிக்
காசினியெல் லாம்புரக்கும் அரசர் தாமும்
ஏர்மருவு சீர்த்திநெடு வாழ்நாள் இன்பம்
எழில்வீரம் பலகலைகள் எளிதின் மேவிப்
பேர்மருவு வான்உலகும் புவியும் போற்றப்
பேரின்பம் இம்மையிற் பெற்று உய்வோர் தாமும்
சீர்மருவும் அநாதிமுத்திச் சேத்தி ரம்சேர்
சிவமாசி லாமணியைத் தெரிசித் தோரே.

வையம் வாழ்கவிண் மாரி பெய்கநல்
மன்னன் ஓங்க மறைக்குலத்து
ஐயர் செய்மகம் நீள்க ஐந்துறுப்பு
ஆன்இ னங்கள் தழைகநீள்
பொய்யில் ஆகம வேத நன்னெறி
பொலிக மேன்மைவெண் ணீறுஇடுஞ்
சைவ நீடுக நீடுக கதி
தங்கும் அஞ்செழுத்து உண்மையே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

பதினொன்காவது குருமூர்த்திகள்

# வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அருளிச்செய்த

# மெய்கண்ட தேசிகமாலை

பூவேபொற் பூவின் மணமே மணப்புதுப் பூங்கற்பகக்
காவே யெனதிரு கண்ணேயென் கண்ணுட் கருமணியே
கோவே குணக்குன்ற மேயெனை யாண்டசு கோதயமே
தேவே திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்க் தேசிகனே. (1)

மெய்வாய் கண்மூக்குச் செவிவழி யேசெல் விடயமைந்தி
னைவா யகப்படு மீபோன் மயங்கு மருவினையேற்
குய்வாய்மை காட்டி வினைவீட்டி யின்ப முறக்கருணை
செய்வாய் திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (2)

ஊனே யவ்வூனி னுயிரே யுயிர்க்கு யிரேயுணர்வே
வானே மறைப்பொரு ளேவடி வாகியவெங்
கோனே யெனதற்றி யானின தாகவுங் கூட்டுவையோ
தேனே திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (3)

பார்த்த விடமெங்கு நாயேற்கு வேற்று முகப்படுமற்
றூர்த்த வறிவினர் நேயமும் வேம்பெனக் காமருளிற்
கூர்த்தமெய் வேடமு மப்படி யேயென் கொடுமையிதைத்
தீர்த்தென்னை யாண்டருண் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (4)

முற்பவம் வந்த வரலாறு முற்று முடிந்த தற்பி
னுற்பவம் வந்த வரலாறு மோர்கில னுண்மை யென்னே
யற்புத விக்ரக வானந்த ரூப வருட்செல்வமே
சிற்பர சின்மய மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (5)

உன்மத்த மாயைக்கு முன்னது கன்ம மெனவுரைப்பார்
கன்மத்தின் முன்னது மாயையென் பார்கலங் காதருளாய்
தன்மத்தை முன்னிட்ட மூன்று முணருந் தபோதனர்க்குச்
சின்முத்தி ரையருண் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (6)

சுந்தர மான முகதா மரையுஞ் சுரந்தவரு
ளுந்திய பார்வையுஞ் சின்முத்தி ரைக்கையு மோங்கு மின்பந்
தந்தருண் மேனியும் பாதார விந்தமு மாய்த் தமியேன்
சிந்தை குடிகொண்ட மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே (7)

ஆறு கிலேனென் கவலையெ லாநின தஞ்செழுத்தைக்
கூறு கிலேனின் னருட்பெருக் கத்தைக் குறித்துணர்ந்துள்
ளூறு கிலேனின் னருளெனைக் காக்குமென் னுண்மையதாத்
தேறு கிலேன் வெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (8)

அறிவா லறிதற் கடங்காத பேரொளி யாகி யெங்கு
நிறைவாய்ப் பரம சுகமாகி நேயமி லாருளத்திற்
பிறிவா யடிய ருளத்தமு தாய்ப்பெரி தாகுமின்பச்
செறிவாந் திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே (9)

கருவினை யெய்தச் செயுமா ணவத்துக்குங் காரணமா
மிருவினை நின்ற நிலைமைமற் றுண்மையெல் லாமொருசொற்
பொருளின தாக வமைத்தருண் ஞானப் பொருட்சுவையாய்த்
திருவெண்ணெய் மேவிய மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (10)

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# சந்தானகுரவர் நான்மணிமாலை

## காப்பு

கல்லால் நிழல்மலை வில்லார் கனிந்துதவும்
பொல்லார் அடிஇணையைப் போற்றவே – சொல்லார்
அணிமாலை யாச்சந்தா னக்குரவர்க்கு ஓர்நான்
மணிமாலை சொல்ல வரும்.

திருவந்த ஞானம் சிவஞானம் என்ன
ஒருவந்தம் என்னுள் உணர்த்தும் – அருமந்த
மெய்கண்டான் சந்தான மேவிப் பணிவாரேல்
கைகண்டார் காணுக் கதி ... 1

சிவஞான போதம்தான் செந்தமிழ்நா டுய்யப்
பவஞானம் ஓடப் பகர்ந்த – தவராயன்
பொய்கண்(டு) அகன்ற புனிதம்எனும் அத்துவித
மெய்கண்ட நாதன்தாள் வேண்டு ... 2

கடல்ஞாலத்(து) உன்னைக் கயிலை வருவார்
மடனும் அகல மதித்தே – கடனுகப்
போதம் உரைத்த பரிசுபுகல் கண்டாய்சு
வேதவனப் பெம்மான் விரைந்து ... 3

பாசம் அகலாது பதியில் கலவாது
மாசில் சமத்துமுத்தி வாய்க்குமோ – நேசமொடு
நீசொலவே வேண்டும் நிலவுபுகழ் மெய்கண்ட
தேசிகனே இன்று தெரிந்து. ... 4

பொருளாக என்னைப் புகுந்துஆண்டு கொண்டுஎன்
இருளே துமித்த இறைவா – அருளாளா
மெய்கண்ட வாணின் மெய்யடியார் குற்றேவல்
செய்குவரேல் எய்தும் திரு. ... 5

வினைப்பி றவிஎய்தி வேதனைஆழ் வேனைத்
தனைப்பரிவில் காட்டும் தலைவன் – எனைப்பிறவா
வண்ணம் தடுத்தாள வந்தருள்மெய் கண்டார்தன்
எண்ணந் தனைஅறியேன் இங்கு. ... 6

வாக்கு மனம்கடந்த வஞ்ச வெளிகாட்டி
நீக்கம்இல் இன்ப நிலைகாட்டும் – போக்கறுசீர்
வெண்ணெய்வாழ் மெய்கண்டான் வேண்டி மயக்குஒழிப்ப
பண்ணில் தருநூலின் மாண்பு ... 7

பேறுஎமக்கு நல்கும் பிரான்வெண்ணெய் மெய்கண்டான்
கூறியநூல் உண்மை குறித்துஓர்ந்தார் – மாறுஇல்
சனன மரணச் சழக்குஅறுப்பார் வஞ்ச
வினைகளைவார் வேண்டுவதுஎன் மேல் ... 8

கல்லாதேன் இச்சைமுதல் கட்டுரைக்கும் சத்திவெண்
எல்லாம் உடையேன் இறைநீயும் – நல்லவாறு
உள்ளாய் அதனால் உவந்துஆண்டு மெய்கண்ட
வள்ளால் பதம்தலைமேல் வை. ... 9

உனைஉணர மாட்டா(து) ஒருவந்தம் நின்றுஇங்கு
எனைமறைத்த வெய்ய இருள்என்றே – தனைநிகராம்
வெண்ணெய்வாழ் மெய்ய விடியும் விளக்கொளி
கண்ணை அக லாய்பின் கழறு. ... 10

— *திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளை.*

## தலபுராணங்கள்

அல்லாத பரசமய அலகைத்தேர் விண்டுஅகல
அகல்புனல் பெண்ணைஅயல் சூழ்வெண்ணெய்ப்
பொல்லாத இபமுகத்துப் புத்தேள்தன் பால்புனித
சிவாக மப்பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலைஇதுமற்று என்றும்ஒன்றாய் நிற்கும்நிலை
இதுஎனமெய்ந் நெறிதேர்ந்து யாரும்
வெல்லாத சிவஞான போதம்சொன்ன மெய்கண்டான்
சரணம் முடிமீது கொள்வாம். ... 11

— சேதுபுராணம் (*நிரம்பஅழகிய தேசிகர்*)

பன்னுசிவ சமயநெறி வளரவேண்டிப்
பரஞ்சோதி அடிகள்அந்தப் பதியின்மேவி
மன்னுபுகழ்ச் சுவேதவனப் பெருமான் இங்கே
வருகஎன விளம்புதலும் மவுனம்நீங்கித்
தன்நிகர்இல் அவனதருள் பெற்றுச்சைவ
சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல்செய்தோன்
அன்னையில்அன் புடையவன்மெய் கண்டதேவன்
அடியவர்க்கு அடியவர்தாள் அகத்தில் சேர்ப்பாம் ... 12

— *திருவெண்காட்டுப் புராணம் (சைவஎல்லப்ப நாவலர்)*

பொய்கண்ட எவையும்எனப் பேரில்லாத
கணபதிதான் புகன்று பின்னர்
மைகண்டத்து அடக்கும்அரன் வழங்குசிவ
ஞானநூல் வகுத்துக் காட்டக்
கைகண்ட பின்அருளே கண்ணுகைக்
கண்டபெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்
மெய்கண்ட தேவன்அடி கைகொண்டு
கூப்பிமுடி மீதுசேர்ப்பாம். ... 13

— *திருப்பூவணப் புராணம் (கந்தசாமிப்புலவர்)*

மடந்தை கைவனை யான்பேர் பின்வரு
களப்பாளன் என்னும்
திடம்தரு அபிதானத்தான் பெற்றிடச்
சுதனுய்த் தீதுஇல்
கடந்தையி னின்று போந்து காங்கயன்
பால்வ ளர்ந்த
குடம்ததி நுரைசேர் நல்லூர்க் குருவினைப்
பணிவா மன்றே. ... 14

— *திருவதிகைப்புராணம் (வாகீச பக்த நாவலர்)*

வெண்ணெய்மர் நகருள் தோன்றி வித்தக
முனிமெய்ஞ் ஞானக்
கண்ணினுல் களங்கம் தீர்த்துட் கமலமெய்
கண்ட தேவன்
பண்ணுறப் பரசு பாணி பகர்ந்தஆ
ரியத்தின் அத்தம்
எண்ணிவண் தமிழால் தந்தான் அவன்அடி
இறைஞ்சு வாமே. ... 15

— *திருவாரூர்ப்புராணம் (மறைஞானசம்பந்த நாயனார்)*

அருளே மறையே புரிந்துஆவி
அளிக்கும் குகனே அம்மறைந்து
அருளே புரிவான் காழியில்வந்து
அருள்கால் அமணர் தம்வாயர்ல்
அருளே தின்றி அழிந்தமையின்
அதுவும்இல்தா வெண்ணெயில்வந்து
அருளே புரியும் மெய்கண்டான்
அமலக் கமலத் தாள்அடைவாம். 16

— பெருந்தோட்டத்து அத்தீச்சுர புராணம்
(ராம. செ. சொக்கலிங்கச் செட்டியார்)

## மெய்கண்டதேவ நாயனார் தோத்திரம்

சிறிய ஆடியில் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிவெலாம் அகப்படுத்து அவற்றின்
நெறிஎ லாம்விளக் கியசிவ ஞானபோதத்தைக்
குறிசெய் தீந்தமி ழால்உரை குரவனைப் பணிவாம்.

— விநாயக புராணம் (கச்சிப்ப முனிவர்)

வேதத்தின் அரும்பொருளை விமலன்அருள் நந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமரபால்
ஓதித்தேர்ந்து அருந்தமிழால் எமக்குஉணர்த்தி எம்ஊனம்
சேதித்த மெய்கண்ட தேவன்அடி சிந்திப்பாம்.

— அருணகிரிபுராணம்

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

- சிவஞானசித்தியார் (ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார்)

## சந்தான குரவர் நால்வர் திருநாள்கள்

சித்திரை அத்தம் உமாபதி ஆவணித் திங்கள்தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞானசம்பந்தர் ஓதுகன்னிச்
சுத்தமெய்ப் பூரம் அருள்நந்தி ஐப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதிமேவினரே.

## சிவஞானபோத நூலின் திறம்

வேதம் பசுஅதன்பால் மெய்ஆ கமம்நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறுநெய் - போதம்மிகு
நெய்யின் உறுசுவையர் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.





சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை

திருச்சிற்றம்பலம்